409

2 அணா

ஆசிரியர். மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 31—12—54 | வெள்ளி | ஒலி 40

போர்க்கோலம் பூணும் பிரபுக்கள்! பொல்லாங்கு நினைத்திடும் புல்லர்கள்!

"போர் மேகம் கலைந்தது; பூமண்டலத்தின் யுத்த பீதி ஓழிந்தது; மாடப் புருக்களும், மலைச்சாரல் கழுகுகளும், நீரோடை ஓரம் நெளிந்தோடும் நளினப் பெண்மான்களும் நீட்டிய பல்லுக்கு ரத்தாபிஷேகம் தேடும் வேங்கைப் புலிகளும் புதுமனை புகுந்து பொது வாழ்வு நடத்தும் புனித திருநாள் எந்நாளோ? எந்நாளோ?" என ஏங்கித் தவிக்கும் அமைதி விரும்பும் அகிலத்து நாடுகளின் பட்டியலிலே தன் பெயரைப் பதிவு செய்துகொள்ள சில சீமான் நாட்டினர் இன்னும் எண்ணிட வில்லை—இதயத்தை திறந்திடவில்லை. வான்முட்டும் மாளிகையின் வாழ்வு தேன் தேன், என்று புலம்பியவர்களும், பர்வதத்தின் உச்சியிலே கடை போட்டு கர்வத்தால் அழிந்தவர்களும் உலகத்தின் போக்கைத் தடுத்து, நல்வழிக்குத் திருப்பும் அபாய அறிவிப்புச் சித்திரங்களாக சரித்திரத்தில் ஆங்காங்கே முளைத்து விட்டபின்னரும் மேட்டுக்குடியினரின் மேற்பார்வையிலே மேனியை மினுக்கி மேதினியில் புகழ்பரப்பித் திரியும் பெரிய தனக்காரர்களின் 'டாலர் டான்ஸ்' இன்னும் நிறுத்தப் படாதது வருந்தத்தக்கதுமட்டுமல்ல-விபரீதத்தைக் கருவாகச் சுமந்துநிற்கும் அந்த 'வல்லவம்' கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

பார்மோசா — சின்னஞ்சிறு தீவு, ஜெகத்தைக் கட்டியாள ஆசைக் கனவுகள் கண்டு சித்தம் குழம்பி 'சீ—சீ! இந்தப் பழம் புளிக்கும்' என்று தந்திர ஓலமிட்ட சியாங்கே ஷேக் தஞ்சமடைந்திருக்கும் குறுகிய நிலப்பரப்பு! இப்போது அங்கே அமெரிக்கர் ஆதிக்கம்! ஆனால் எப்போதும் பார்மோசா சீனாவுக்கு உரிமைப்பட்டதே! தனித்து நிற்கும் பார்மோசாவை தாயகத்தோடு சேர்த்துக்கொள்ள செஞ்சீனத்திற்கு ஆசை! தன்னிடமிருப்பதை தட்டிப்பறிக்க சீனாவுக்கு எவ்வளவு ஆணவம் என்பது அமெரிக்காவின் நெஞ்சழுத்தம்—யானைகள் ஒன்றுக்கொன்று ஊராய்ந்து கொள்ளும் உஷ்ணத்தில் உலகம் பொசுங்கிவிடுமோ என்ற அச்சம் இந்தியாவுக்கும் இன்ன பிறநாட்டினருக்கும்.

இந்தப் பெருமோதல் அரும்பிலேயே கிள்ளியெறியப் படவேண்டும். 'யாமொன்றறியோம் பராபரமே' என்போர் இந்தத்தகராறைப் பொறுத்த வரையிலே அவர்கள் எந்த நாட்டுக்காரர்களாக இருந்தாலும் உலகத்தின் பழிச் சொல்லுக்குத் தப்பமுடியாது, பார்மோசாவால் விழுந்த அந்த 'முடிச்சு' எங்கெங்கே, எதை எதை சுற்றிக்கொண்டு கிடக்கிறது என்பது பிரமிக்கத்தக்கதொன்றாகும்.

செஞ் சீனத்தின் சிறைக் கோட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த கொரியா போர்க் கைதிகள் வதிவதாக அமெரிக்கா புகார் செய்திருக்கிறது.

"போர்க் கைதிகளாக அவர்கள்! அல்ல — அல்ல! 'உள் நுழைந்து உளவறிந்து எங்கள் வாழ்வுக்கு உலை வைக்க எண்ணிய அமெரிக்க ஒற்றர்கள் அவர்கள் கைதிகளல்ல!" என்று மறுத்துப் பேசியிருக்கிறது சீனா. சீனாவின் கருத்துப்படி சீனத்து சிறையிலே வதியும் அந்த ஒற்றர்கள் உள்ளபடியே அமெரிக்காவின் கூற்றுப்படி கைதிகள் தான் என்று வைத்துக் கொண்டாலும், தன்னுடைய வாதம் நேர்மையானது என்று பேசும் அமெரிக்கா, சீனாவைச் சேர்ந்த மாணவர் பலரை தாயகத்துக்கு திரும்ப விடாது அமெரிக்காவிலேயே தடுத்து வைத்திருப்பது கண்டிக்கத் தக்கது. உலக மாதா அமைதிக்கு வாழ்க்கைப்பட்டு என்றென்றும் சுமங்கலியாக வாழ வேண்டுமென்ற எண்ணம் அமெரிக்காவுக்கு இருந்திருக்குமானால் கல்வி பயிலச் சென்ற மாணவ மணிகளின் கண்ணீரைத் துடைத்து கப்பலேற்றி வைத்துவிட்டு சீனத்தைக் குற்றக் கூண்டிலே ஏற்றுவித்திருக்க வேண்டும்—நல்லவர்கள்—நாணய மானவர்கள் செயல் அதுதான். அதை விடுத்து, ஐக்கியநாட்டு அமைப்பிலே, கைதிகளை விடுவிக்கும்படி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது என்று மண்ணதிர விண்ணதிர முழக்க மிட்டும் பயனில்லை—காரணம், ஐக்கிய நாட்டு அமைப்பின் அந்தத் தீர்மானம் ஒருதலைப் பட்சமாக தீர்மானித்தது என்று கூடச் சொல்லலாம். கைதிகளை விடுவிக்கக் கோரிய அந்த ஐக்கிய நாட்டு அமைப்பு, பதிலுக்குப் பதிலாக மாணவர்களை மடக்கி வைத்திருக்கும்அமெரிக்காவுக்கு எதுவுமே சொல்லவில்லை. மாசற்ற தீர்ப்பாகுமா இது?

"முதலிலே மாணவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்—அமெரிக்கக் கைதிகளை விடுவிக்கக் கோரும் தீர்மானம் கண்டனத் தீர்மானமானாலும் சரி, கனிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமானாலும் சரி அது இரண்டாவதுதான்" என்பதை நீதியின் சார்பிலே நிற்கும் நாடுகளுக்கு நாம் நினைவுறுத்த வேண்டியதில்லை.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் ஆம்மர் ஷீல்டு சுமுகமான முடிவுகாண சீனா செல்கிறாராம். உலகப் போர் முடிந்து, அமைதி காக்க அனைத்துலக நாடுகளின் சார்பாக நியமிக்கப் பட்ட எந்த அலுவல்மனையும் இதுவரை எந்த முயற்சியிலும் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. அந்தத் தோல்விக் காதையிலே ஆம்மர் ஷீல்டு பயணமும் ஒரு அத்தியாயமாகி விடக் கூடாது என்பதுதான் நமது ஆசை!

ஆம்மர்ஷீல்டின் முயற்சி வாகை சூடினால் அந்த வெற்றி ஊருக்கு உழைத்தவர்களின் நற்றொண்டுகளில் நடுநாயகமாக விளங்கத் தக்கதாகும்.



சிவாலயமல்ல!

கோயிலென்று கருதி கும்பாபிஷேகம் எப்போது என்று கேட்டு விடாதீர்கள். 'மத சார்பற்ற அரசு'—என்ற ஏமாற்று வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே கொலு விற்றிருக்கும் காங்கிரஸ் கொற்றவர்கள் ஆவடியிலே நடத்த விருக்கும் காங்கிரஸ் மாநாட்டின் வெளித்தோற்றம் இது!

கேளாக்காதர் சீடருக்கு கேள்வித்தாள்!

[கனம் கல்வி அமைச்சர் சுப்ரமணியம் அவர்களுக்குஇந்தக் கேள்வித்தாளை படைக்கிறோம்.]

★ இப்போது கொண்டு வந்திருக்கும் நாடகச் சட்டம் ராதாவின் ராமாயணத்திற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று முன்னாள் முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார் (டிச. 24 கவுன்சில்) சொல்லுகிறார் — ஆனால் நீங்களோ, "இந்தச் சட்டம் முன்னமேயே கொண்டுவரபபட்டது — ஆனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது" என்கிறீர்கள் — இதில் எது உண்மை? நாங்கள் எதை நம்புவது?

* * *

★ "தனிப்பட்ட ஒரு சிலரின் நலனுக்காக நான் இங்கு (மந்திரி) பிரதிநிதியாக வந்திருக்கிறேன் என்று கஜபதி நாயக்கர் கூறுகிறார். அவர் அவ்வாறு நினைத்தால் அவரது அபிப்பிராயத்தை நான் மாற்ற முடியாது?" என்று டிச. 24- கவுன்சிலில் பேசியிருக்கிறீர்கள். இது அகந்தை கலந்த பதிலா? அல்லது கஜபதி நாயக்கர் சொல்வது உண்மைதான்; — அதை மறுத்துப் பேசுவதற்கு தங்களால் இயலாது என்பதை மறைமுகமாக ஒப்புக் கொள்கிறீர்கள் என்று பொருளா? விளக்கம் தருக — அல்லது காரணம் காட்டுக!

* * *

★ "இம்மசோதா (நாடக மசோதா) போன்ற முக்கியமான விஷயத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் சுயமரியாதை உள்ள எந்த ஒரு மந்திரியும் பதவியை ராஜினமா செய்திருக்க வேண்டும்" என்று டிச. 25- கவுன்சிலில் தாங்கள் பேசியிருப்பது, மற்ற மந்திரிகளை மிரட்டுவதற்காக என்றே நாங்கள் கருதுகிறோம். உண்மைதானே அது?

* * *

★ நாடகச் சட்டத்தைப் பற்றிய விவாதத்தின்போது 'சுயமரியாதை விளக்கா'க நடிக்கும் தாங்கள், நீங்களே நிதி மந்திரியாக இருக்கும்போதே தாங்கள் பட்ஜட்டை சட்டசபையில் சமர்ப்பிக்குமுன்னரே உங்களையும் அறியாமல் பட்ஜட், பத்திரிகையில் பிரசுரமானதே அப்போது எங்கே போயிற்று தங்களின் சுயமரியாதைத் தத்துவம்? அப்போதே தாங்கள் ராஜினமா செய்திருக்க வேண்டாமா?

* * *

★ புதிய கல்வித் திட்டம் அமுலான நேரத்தில் 'அது அருமையான திட்டம் — பெருமைக்குரிய திட்டம்' என்று புகழ் பாடித் திருந்தீர். ஆனால் அந்த நச்சுத் திட்டம் ஒழிக்கப்பட்டபின் அந்தத் திட்டத்தை ஆதரித்த சுயமரியாதையுள்ள எந்த மந்திரியும் பதவியை ராஜினமா செய்வதுதானே ஜனநாயகத்தின் பாலபாடம்? நீங்கள் அப்படிச் செய்யாது "புதிய கல்வித் திட்டம் நல்லதென்றுதான் என் சொந்தக் கருத்து; தனிப்பட்ட முறையில் புதிய கல்வித் திட்ட ஒழிப்பால் சஞ்சலமடைந்துள்ளேன்" என்றுதானே 'ஜாலம்' செய்தீர்கள்? சுயமரியாதை எங்கே? தமிழ் பண்பு எங்கே?

* * *

★ "சமுதாயத்தில் என்ன மாற்றம் செய்வதென்ற சந்தேகம் நாட்டில் கிளம்பியுள்ளது. இந்தக் குழப்பத்தைத் தவிர்க்க சர்க்கார் முக்கிய பங்கேற்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்" என்று ஆச்சாரியார் சென்ற மாதம் (நவ. 28) அண்ணாமலை மன்றத்தில் பேசியதையும் அதை அடுத்து சென்னை சர்க்கார் நாடகச் சட்டத்தை கொண்டு வந்ததையும் ஆராயும்போது இந்த நாடகச் சட்டம் ஆச்சாரியாரின் தூண்டுதலோ என்று சந்தேகிக்கிறோம்! தாங்கள் இதை ஒப்புகிறீர்களா

* * *

★ "பலாத்காரத்தை தூண்டுவதை தடுத்தே ஆகவேண்டும்; அனுமதிக்க முடியாது" என்று நாடகச் சட்ட விவாதத்தின் போது பேசியிருக்கிறீர்கள். ஆச்சாரியார் டிச. 24-ம் தேதி, "சுயமரியாதைக்காரர்களின் வீடுகளை சூறையாடுங்கள். ஆண்டவன் நம்பிக்கையில்லாதவர்களை அடியுங்கள் — உதையுங்கள்!" என்ற பாணியில் "இந்த மசோதாவினால் மதத்தோடு விளையாடினால் அதிலிருந்து பெரும் தீங்கு நேரிடும். மதம் உணர்ச்சிக்கு உடன்பட்டது; நெருப்புடன் விளையாடாதீர்கள்!" என்று பேசியிருக்கிறாரே இது பலாத்கார போதனையில்லையா? ஆச்சாரியார் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

★ நாடகத் தடையால் பாதிக்கப்படும் கலைஞர்களில் கோர்ட்டுக்குப் போக வசதி படைத்தவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்? ஐந்து சத விகிதம்கூட இருக்கமாட்டார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். நீங்கள்?

* * *

★ ஒரு உயர்தர அதிகாரி தனக்கு இருக்கும் தனிப்பட்ட விரோதம் காரணமாக நாடகத்தை தடை விதித்து—நீதிமன்றத்தில் சர்க்கார் தோற்றால் அந்த அதிகாரிக்கு தண்டனை தரப்படுமா? பெரும் நஷ்டத்தாலும், கௌரவ பங்கத்தாலும் உளம் வருந்தும் நாடகக் கலைஞர்களுக்கு வகையான ஈடு தர மசோதாவில் நிபந்தனை இல்லையே, இது முறையா?

* * *

★ ஞான மார்க்கத்தில் முதிர்ச்சியுள்ளவர்கள் இப்படிப்பட்ட நாஸ்தீகப் பிரசாரத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள் (டிச. 23 கவுன்சில்) என்றீர்களே, அப்படியானால் தற்போது (மதுரையில் — திருச்சியில் — கரூரில்) ராமாயணத்தையும் அறிவியக்க நாடகங்களையும் தடை செய்கிறீர்களே ஏன்? வைத்திநாதய்யரும், அவர் தம் புதல்வரும், திருச்சி மகாலிங்கய்யரும், தங்கள் கூற்றுப்படி 'ரவுடி'கள் தானா?

* * *

★ "பழைய சட்டம் நாடகக்கலை வளர்வதைத் தடுக்கவில்லையானால் இந்த மசோதாவும் அவ்விதம் தடுக்காது" என்று மசோதாவை ஆதரித்துப் பேசிய ஒருவர் மேல் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்—நீங்களும் அதை அனுமதித்திருக்கிறீர்கள். பழைய சட்டத்தோடு புதிய மசோதாவை ஒப்பிடுவது சரியானால் இந்த புதிய நாடக மசோதா ஏன்?

* * *

★ பொதுவுடமைக் கட்சித்தோழர் ஒருவர் ராதாவின் ராமாயணத்திற்காகத்தானே இந்தச் சட்டம் என்று கேட்டபோது கார்ல் மார்க்சை யாராவது அவதூறு செய்தால் அங்கத்தினர் அனுமதிப்பாரா என்று பதில் சொல்லியிருக்கிறீர்கள்; மறைந்து நின்று கொல்லும் கோழைத்தனத்தைப் போதிக்கும் இராமகாதையும், மார்க்சின் 'மூலதனமும்' ஒன்று என்கிறீர்களா, அல்லது ராமனும் மார்க்சும் சமமானவர்கள் என்பது தங்களின் எண்ணமா?

* * *

★ சீர்திருத்த நோக்கங் கொண்ட கதநாயகன், "வைசூரியைத் தடுக்க மாரியம்மனுக்கு பூஜை போட்டுப் பயனில்லை. எல்லோரும் அம்மை குத்திக்கொள்ள வேண்டும்" என்று பக்தர் கூட்டத்தில் பிரச்சாரம் செய்தால் புதிய நாடகச் சட்டத்தின்படி பக்தர் மனதைப் புண்படுத்துவதாகக் காரணம் காட்டி அந்த நாடகம் தடை செய்யப்படமாட்டாது என்கிறீர்களா? ஏன்? எப்படி?

* * *

★ பெரும் பெரும் வைத்திய நிபுணர்களாலும் 'இயலாது' என்று கைவிடப்பட்ட வயிற்றுநோய், ஐயப்ப சாமியின் ஒரு சிட்டிகை விபூதியால் நீங்கிவிடுவதாக 'சபரிமலை ஐயப்பன்' என்ற நாடகத்தில் காண்பிக்கப்படுகிறதே அப்படிப்பட்ட நாடகங்கள் தடை செய்யப்படுமா? வைத்திய நிபுணர்களின் கவுரவம் காப்பாற்றப்படுமா?

* * *

★ ஐதராபாத் நவாப்பிடம் கணக்கு வேலை பார்த்த ராமதாசர், ராமபக்தியின் காரணமாக பத்ராசலம் ஆலயத்தைப் புதுப்பிக்க தன் வசமிருந்த நவாப்பின் கிஸ்திப் பணத்(12 லட்சம்)தை செலவு செய்து விட்டு அதற்காக ஐதராபாத் பாதுஷாவினால் 10 ஆண்டு தண்டனை பெற்றதாகவும், அவருடைய பக்திக்கிரங்கி ராமனும், இலக்குமணனும் சிப்பாய் வேடத்தில் வந்து பக்தனின் கிஸ்திப் பணத்தை பாதுஷாவிடம் தந்து காட்சி கொடுத்து மறைவதாகவும், அதன் பிறகு ஐதராபாத் தானிஷா ராமதாசிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும் 'ராமதாஸ்' நாடகத்தில் காட்டப்படுகிறது. இந்த நாடகத்தின்படி முஸ்லீமான பாதுஷா ராமபிரான் கோயிலுக்கு வந்து இந்துக் கடவுளை வணங்குவது முஸ்லீம்களின் மனதை புண்படுத்துவதாகாதா? திருட்டுத்தனம் செய்து முக்திக்கு வழி தேடுவதை நீங்கள் ஏற்கிறீர்களா? அப்பேர்ப்பட்டவனை ஆண்டவன் காப்பாற்றுவது சமுதாயம் அனுமதிக்கக் கூடியதுதானா?

தலையங்கம்

சென்னை [31—12—54] வெள்ளி

நாடும், ஏடும்!

"அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர் தன்னைமொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே! உன்
நலம் காணார் ஞாலம் காணார்."

ஏடுகளின் பயன்பற்றிக் **கவிஞர் பாரதிதாசனார்** அவர்கள் இதுபோன்ற எழில்மிகு வரிகளைத் தந்துள்ளார்கள். ஒரு நாட்டின் கலை உயர—நிலை உயர-நாகரீகம் உயர-அரசியல்--சமுதாய--பொருளாதார விழிப்பு ஏற்பட ஏடுகள் இன்றியமையாதவை என்பதை யாரே மறுக்க வல்லார். ஒரு சமுதாயத்தின் சரித்திரத்தைச் சொல்லி, பெற்றிருந்த வளப்பங்களைச் சொல்லி. இன்றுள்ள நிலைகூறி, நன்னிலை யெய்தப் புதுவழி கூறி நடைபோட வேண்டிய தலையாய கடமைகளை மறந்து, இன்றைய ஏடுகள் பல, கேடுசூழ் குப்பை மேடுகளாகக் காட்சி தருகின்றன. காரிருள் அகத்திலே சதிரொளி பாய்ச்ச வேண்டிய அந்தக் காலக்கண்ணாடிகள், உடைந்து சிதறி காலைக் குத்தி, கையைக் கிழிக்கும் துகள்களாக மாறிக்கிடக்கின்றன.

நமது தென்னகத்தைப் பொறுத்த வரையிலே, காங்கிரஸ் ஆதரிப்பு ஏடுகள் பல நாட்களாக பலவித பலங்களோடு நடைபெற்று வருகின்றன. கம்யூனிஸ்டு கட்சியின் ஏடுகள் நடைபெறுகின்றன. திராவிட இயக்கத்தின் ஏடுகள் நடைபெறுகின்றன. இவை அனைத்தும் தத்தமது கொள்கைகளை, திட்டங்களை, அரசியல் தத்துவங்களை வெளியிட்டு வருகின்றன. அவரவர் இலட்சிய நோக்குகளுக்கு இடமளித்து, அந்த ஏடுகள் மூலமாக மக்கள் உள்ளத்திலே இடம் பெற அனைவருக்கும் உரிமையிருக்கிறது.

கொள்கைகளை வைத்து காரசாரமாக விவாதிக்கவோ எழுத்துப் போர் நடத்தவோ-மற்றவர் கூற்றுக்களை ஆதாரங்காட்டி மறுக்கவோ-பிழைகாணுமிடத்து கண்டனக் குரல் எழுப்பவோ-எல்லா ஏடுகளுக்கும் உரிமையுண்டு. அதை நல்லோர் மறுக்கமாட்டார்கள். நாகரீகப் பாதையிலேயிருந்து வழுக்கி விழுந்து, எதிர்க் கட்சிக்காரர்களை எப்படியெப்படித் திட்டினால் வாய் ருசிக்கும் என்று எண்ணமிட்டு, அன்ன மிட்ட வீட்டிலே கன்னமிடும் பண்பினோர் பலர் இன்றைய தினம் ஏடுகளைத் தூக்கிக் கொண்டு திரிக்கிறார்கள். அத்தகைய இழிதகையோரின் பெருக்கம், தி. மு. கழக எதிர்ப்புப் பாசறையிலேதான் இன்று பெரிதும் காணப்படுகிறது! தி. மு. கழகத்தின் வளர்ச்சி கண்டு, வயிற்றிலே தீமூண்டு, வாயிலே வந்ததெல்லாம் பேசுவதோடு நில்லாது, மனதிலே தோன்றியதையெல்லாம் மட்டமான மொழியில் கொட்டித் தீர்த்துக் கொள்ளவும் துணிகிறார்கள். எந்த இயக்கமாயினும் சரி; எந்த இபக்கத்தைச் சேர்ந்தவராயினும் சரி; எந்த இயக்க சார்பிலே நடைபெறுகிற ஏடாயிருந்தாலும் சரி; அனுசரிக்கிற மொழியிலே-நடையிலே-கண்டனக்குரல் எழுப்புகிற வகையிலே—கண்ணியம், கட்டுப்பாடு, மிகமிகத் தேவை!

காங்கிரசின் ஏடுகள் எனப்படும் ஒருசில முதல்தர ஏடுகள், நம் கழகத்தின் செய்திகளை இருட்டடிப்பு செய்தும், தேவையற்ற பஜனைமடச் செய்திகளுக்குப் பெரும் இடம் தந்தும், நமது இலட்சியங்களை ஆதாரமின்றிக் கண்டித்தும் வருகின்றன என்றாலும், அவைகள் நாகரீகக் குறைவாய் நடந்துகொண்டன என்று கூறமுடியாது! வஞ்சகத்தோடு நடந்திருக்கலாம்; அப்போதும் அவைகள் சாக்கடையிலே வழுக்கிவிழுந்தது கிடையாது!-கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நடைபெறும் 'ஜனசக்தி' என்ற ஏடும், முன்னுக்குப்பின் முரணாக பல நேரங்களில் எழுதியும். கழகத்தைத் தேவையில்லாமல் கண்டித்தும், கொள்கைகளைப் பழித்தும் வந்திருக்கிறது என்றாலும், அந்த ஏடும், மூன்றாந்தர நடையிலே தன் பயணத்தை நடத்தியது கிடையாது! ஆனால், இன்று காங்கிரசை ஆதரிக்கவும், கம்யூனிஸ்டை ஆதரிக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டு-அதே நேரத்தில் தி. மு. கழகத்தை ஒழிக்க வேண்டுமென்று கனவும் கண்டுகொண்டு நாட்டிலே நடமாடும் ஏடுகள் பல, அந்தக் கட்சிகளிலே உள்ள கடைசித்தர ஆட்களால் நடத்தப்படுகின்றன. எம். எல். ஏக்கள் சிலர் அந்த ஏடுகளின் ஆசிரியராக இருக்கிறார்களே; அவர்கள் எல்லாம் கடைசித்தர மனிதர்களா? என்று வியப்போடு கேட்கலாம்--இந்தக் கேள்விக்கு சரியான பதிலை, அவர்கள் நடத்துகிற ஏடுகளே சொல்லும்! நினைக்கவும் நெஞ்சு நாணுகிற அத்துணைக் கேவலமான மொழிகள்! அந்தோ-தமிழ்த் தாயை நிர்வாணக் கோலத்திலே நிறுத்தி ரசிப்பதற்கும், அந்தக் கோணங்கிகள் எழுதுகிற நடைக்கும் வேறுபாடே கிடையாது!

தமிழன் மீது வேல் பாய்ச்சும் கொடியோர், தமிழ் எழுத்துக்களை இழிவு தரும் நிலையில் அச்சுக்கோர்த்து அவைகளை தமிழ்மக்கள் மத்தியிலே நடமாடவும் விடுகிறார்கள் என்றால்; என்னே கொடுமை! என்னே கொடுமை!

தி. மு. கழகத்தின் கொள்கைகள் தீயவை என்று இடித்துக் காட்டல் தவறு என்று யாம் கூறவில்லையே! நன்றாகக் கூறட்டுமே! "திருத்து...அல்லது திருந்து!" என்றுதானே, தி. மு. கழகம் முழங்கி வருகிறது. அதைவிடுத்து, தி. மு. கழகத் தலைவர்களையும், முன்னணி வீரர்களையும், தொண்டர்களையும், ஆபாசமான முறையிலும், அருவறுக்கத் தக்க முறையிலும் தாக்குவது ஏன்? கூவம் நதியிலே பேனாவை நனைத்து எழுதும் இந்தக் கொடுமைக்கு முடிவே கிடையாதா? கிடையாது என்றுதான் பதில்வரும். அந்தப் பதிலைப்பற்றி, தி. மு. கழகம் கவலைப்படபோவதில்லை.

சரித்திரத்தின் பயங்கரம் நிறைந்த பாதைகளை தி. மு. கழகம் படித்திருக்கிறது. இலட்சிய வீரர்களுக்கு, விடுதலை விரும்பிகளுக்கு புதுமை எண்ணம் கொண்டவர்களுக்கு தரப்பட்ட பரிசு என்ன? தாக்குதல்கள் எத்தகையவை? கேலிக் கணைகளும், கண்டன ஈட்டிகளும் எவ்வளவு? எவ்வளவு! என்பது தி. மு. கழகத் தோழர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், கழகம்-நாட்டிலே வளர்க்க வேண்டிய நல்ல பண்புகளிலே. ஏடு நடத்தும் பண்பும் ஒன்றெனக் கருதுகிறது!- சமுதாய. அரசியல் சீர்திருத்தங்கள்- காளி, மாரி முதலிய ஆயிரக்கணக்கான கடவுள்களை ஒழித்து, ஜாதியை, மதவெறியை ஒழித்து. தனித் திராவிடம் பெற்றுவிட வேண்டுமென்பதுமட்டுமல்ல; எல்லாத் துறைகளிலும் கண்யம் வளரவேண்டும்-நாணயம் வளரவேண்டும்-ஒழுங்கு வளரவேண்டும்-நல்ல பண்பு வளரவேண்டும்-என்றும் தி- மு. கழகம் விரும்புகிறது. அதனால்தான் எல்லாக் **கட்சியிலும் உள்ள நல்லவர்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்; உங்கள் கட்சியின் சார்பிலே ஒரு ஏடு ஒழுக்கக் குறைவாக. நடைபெறுமானால், தகாப் பதங்களை எழுதி, தமிழுக்கே இழுக்கு ஏற்படுத்துமானால்,** அத்தகைய கீழ்த்தர ஏடுகளை அடக்கி, அழிப்பதற்கு உடனே ஆவன செய்ய முன்வாருங்கள்! அந்தக் கீழான ஏடுகளுக்கும். உங்கள் கட்சிக்கும் சம்பந்தமில்லையென்று பகிரங்கமாகக் கூறி விடுங்கள்!

எதிரியின் மீது வீச கையிலே பல ஆதாரங்களை எடுத்துச் செல்வது; இன்றைய உலகில் அரசியல் நாகரீகம்! எதிரியின் மீது வீச கையிலே கல் எடுத்துச் செல்வது அரசியல் அநாகரீகம்! எதிரியின் மீதுவீச கையிலே மலம் எடுத்துச் செல்வது; ஆபாசமான அரசியல் நாகரீகமும், தன்னைத் தானே அசிங்கப்படுத்திக் கொள்வதுமாகும்!

இந்த உண்மையை. இழிமொழி உமிழும் ஏடுகள் உணர வேண்டும். ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம்-அவைகளை கண்யமான முறையில் போராடித் தீர்த்துக் கொள்ளலாம். கடைகெட்டதன்மையால் கருத்து வேற்றுமை ஒழியாது; வளரும்!

தாக்கி எழுதுவதாக எண்ணி, தமிழ் மொழியையே ஆபாசப் படுத்துவது-தற்கொலைச் செயலாகும் இதை, தி. மு. க. எதிரிகளும், அவர் தம் நாலாந்தர ஏடுகளும் அறிய வேண்டுகிறோம்.

பெங்களூரில்
ஜனவரி : 1, 2, தேதிகளில் தி. மு. க. மாநாடுகள்
நடைபெறும்

தந்தையும் மகனும் தருமம் தவறியவர்கள்!

சக்கரவர்த்தியின் திருமகன்

முக்காஜி

சித்ரகூட மலைச் சாரலிலே, "சீதா! அதோ, பறவைகள் விளையாடுவதைப் பார்! மலைப் பாறைகளைப் பார்! அவற்றில் தாதுக்கள் நீலமும், மஞ்சளும் சிகப்புமாக எப்படி மின்னுகின்றன! வனத்தில் செடிகளையும் கொடிகளையும் பார்! புஷ்பங்களைப் பார், நாம் என்னவோ எண்ணினோம்; இந்த வனவாசம் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது. பட்டணவாசத்தைவிட இந்த வனவாசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது.' என்றெல்லாம் ஆச்சாரியார் எழுதியிருக்கிறபடி, சக்கரவர்த்தி திருமகனும், ஜானகியும் உரையாடிக் கொண்டு, இன்பமாகப் பொழுது போக்கி "கஷ்டப் பட்டுக்" கொண்டிருந்த சமயத்திலே பரதனும், மூன்று அரசியரும், மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள். போருக்கு வருகிறானா; அல்லது அண்ணனை அழைத்திட வருகிறானா என்று கூடத் தெரிந்து கொள்ள முடியாமல் அவசரப்பட்டுக் குதிக்கிறது லக்ஷ்மண அவதாரம். வந்த பரதனும் மற்றவரும் ராமனைக் கண்டு வருந்தினார்கள். தசரதன் இறந்த செய்தி அவர்கள் சொன்ன பிறகுதான் மகா விஷ்ணுவின் அவதாரமான ராமருக்குத் தெரிகிறது! தெரிந்த பிறகு, தந்தைக்கு செய்து முடிக்க வேண்டிய கடமைகளைச் செய்து முடித்தார்கள்.

அங்கு மந்தாகினி என்னும் நதியிலேதான் அவர்களுக்கு வேண்டிய தண்ணீரை வழக்கமாக லக்ஷ்மணன் எடுத்துச் செல்வான் என்று கேள்விப் பட்டதும் கௌசல்யா தேவியும்—சுமித்திரையும் அழுதார்களாம். கௌசல்யை ஏன் அழுதிருப்பாள்? அரண்மனையிலே கேட்ட நேரத்திலே தண்ணீரும் பன்னீரும் கிடைக்குமே இங்கே என் மகன் ஆற்றுத் தண்ணீர் குடித்துக் கஷ்டப்படுகிறானே யென்று அழுதாள் போலும்!

தானாளாவிட்டாலும் தன் பாதம் ஆளட்டுமென்கிறான்!

சுமித்திரை அழும்போது, கௌசல்யை என்ன சொல்லி தேற்றுகிறாள் தெரியுமா? ஆச்சாரியார் நடையிலேயேபடியுங்கள்,

"சுமித்திரையே! என் மகனுக்காக, இந்தத் துறையில் உன் மகன் தினமும் ஆற்றில் இறங்கிச் சுத்தமான ஜலம் ஆசிரமத்துக்கு எடுத்துப்போய் வைக்கிறான், பார்த்தாயா? அண்ணனுக்காக எந்த வேலையும் சந்தோஷமாக செய்வான் உன் மகன்!'

என்று கௌசல்யை கூறி அவளை சமாதானப் படுத்துகிறாள். இலக்குமணனின் பெருமையைக் கூறுவது போல், அவன் கஷ்டங்களை அவனது தாயிடம் மறைக்க எண்ணுகிறாள் மூத்தவள்.

தண்ணீர் எடுத்தல் முதலிய வேலைகளைக்கூட இலக்குமணனே செய்திருக்கிறான் என்ற எண்ணும்போது. சீதையைப் பற்றி நாம் என்ன கருதுவது என்றே புரியவில்லை. ராமனின் அணைப்பிலேயே ஈடுபட்டு ஆரண்ய சுகத்தை அனுபவித்த சீதாதேவி, தன் 'கொழுந்தனார்' லக்ஷ்மணன், குடமெடுத்துத் தண்ணீர் கொண்டுவரச் செல்லும் நிலைமையை எப்படித்தான் அனுமதித்தாளோ தெரியவில்லை. உடல் நலமில்லாது வருந்தும் பெண்கள்கூட, தங்கள் வீட்டு ஆண்மக்கள், அடுக்களை வேலைகள் செய்வது, தண்ணீர் கொண்டுவருவது போன்ற பணிகளைச் செய்ய அனுமதிக்க மாட்டார்கள். சீதாதேவியோ கற்பின் அணிகலம்! பழம் பாரதத்தின் பெண்மைச் சிறப்புக்கோர் எடுத்துக் காட்டாம்! அவள் இம்மாதிரி வேலைகளை இலக்ஷ்மணன் செய்யும் போது பார்த்துக்கொண்டிருந்தாளாம்.

அது நிற்க; பரதனும் ராமனும் கானகத்தில் சந்தித்த கட்டமே மிகப் பெருமை வாய்ந்த கட்டம் என்று புகழ்கிறாரே ஆச்சாரியார்—அந்தக் கட்டத்தை சிறிது கவனிப்போம்.

"பரதன் ராஜ்யத்தை ஆள வேண்டும்; ராமன் பதினாங்கு வருடம் காடேக வேண்டும்" என்பதுதான் தந்தையின் கட்டளை. இந்த வரிகளை நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டு இந்தக் கட்டத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். பரதன், ராமனைத் திரும்ப அழைக்கும் போது ராமன் என்ன பதில் சொல்லுகிறான் தெரியுமா?— "தந்தை, உனக்கு ராஜ்யப் பொறுப்பைத் தந்தார்—எனக்கு வனவாசம் தந்தார். இப்படி நம்மிருவருக்கும் வாழ்க்கையை வகுத்துக் கொடுத்து மரணமடைந்தார். ராமனுடைய உள்ளத்திலே தசரதனைப் பற்றிய ஆத்திரம் எவ்வளவு இருந்திருக்கிறது என்பதைப் பாருங்கள். ஒருவனை நாடாளவும், இன்னொருவனைக் காடாளவும் செய்து, இருவருக்கும் தந்தை, வாழ்க்கையை வகுத்துக் கொடுத்துவிட்டார், என்று எரிச்சலை, கேலியோடு கலந்து வழங்குகிறான் ராமன்.

ஜாமாலி என்பவர், ராமனை எப்படியாவது அயோத்திக்கு வரவேண்டும் என்று கோரிய போது சொல்லுகிறான்;

"சத்தியத்தை நீர் ஒரு பொருட்டாக மதிக்காமல் நாஸ்திகம் பேசுகிறீர். சத்தியத்தைவிட மேலான ஒரு பொருள் உலகத்தில் இல்லை" இப்படிச் சொல்வது ராமன். தந்தை பரதனுக்கு முடிசூட்ட கட்டளையிட்ட பிறகு அதை மீறுவது சரியல்ல என்கிறான். சத்தியத்தைவிட மேலானது எதுவுமில்லை; அதை மீறுவது நாஸ்திகம் என்கிறான். அப்படியானால், கேகய மன்னனுக்கு தசரதன் அளித்த வாக்குறுதியை—சத்தியத்தை—மீறுவது மட்டும் நாஸ்திகமில்லையா? அந்த தசரதனை தர்ம ராஜன் என்றும் நேர்மையான வேந்தன் என்றும் போற்றுவதிலே உண்மையிருக்கிறதா? ஆச்சாரியார் இதற்கு பதில் சொல்ல முன் வருவாரா? ராம காதையை தலையிலே தூக்கி வைத்துக் கொண்டு பரதனைப் போல் ஆடுகிறவர்கள் இருக்கிறார்களே அவர்களைக் கேட்கிறேன்—தசரதன் சத்தியம் தவறியவன் தான் என்பதை மறுக்க முடியுமா இவர்களால்? ஆட்டு மந்தை போலக் கூடி, "கோவிந்தா" போட்டுப் பயனில்லை. நாம் கூறும் கருத்துக்களை நேர்மையாக எதிர்த்திடும் நாகரீகமுள்ளவர்கள் முன்வர வேண்டுகிறோம்; தசரதன் சத்தியம் தவறிய நாஸ்திகனா இல்லையா என்பதை விளக்கிட வேண்டும்—வருவார்களா?— துணிவு உண்டா? ஆதாரம் இருக்கிறதா?

நிற்க, ராமனும் சத்தியத்தை எப்படிக்காப்பாற்றினான் என்ற அழகை சற்று கவனிப்போம்.

பரதன் அழைத்தான்-ராமன் வர மறுத்துவிட்டான். வசிஷ்டர் அழைத்தார்-வரமறுத்துவிட்டான், ஏன்? ராமனுக்கு அயோத்தி திரும்பவும், ராஜ்ய பாரத்தை ஏற்கவும் ஆசையில்லை; தந்தை, தம்பிக்குத் தந்த ராஜயத்தை தான் அபகரிக்க விரும்பவில்லை— அதனால் அவன் வர மறுத்துவிட்டான் என்று கருத முடிகிறது? இல்லை— இல்லவே இல்லை!— ராமன், தசரதன், வசிஷ்டன் முதலியோர் சதி நடத்தி ராமனுக்கு முடிசூட்ட ரகசிய ஏற்பாடு செய்தபோது, அதை முறியடித்து, அவனைக் காட்டுக்கு அனுப்பினாளே; கைகேயி— அவளிடத்திலே அல்லவா இருக்கிறது சூட்சமம்!— அவள், பரதனைப் போல ராமனைக்கெஞ்சிக் கூப்பிட்டிருப்பாளேயானால் ராமன் கட்டாயம் வந்தேயிருப்பான், பரதன், தற்கொலை செய்து கொள்வேன் என்றான்—தீயில் இறங்குவேன் என்றான்—என்னவெல்லாமோ சொல்லி அழுதான்; ஆனால், கூப்பிடவேண்டியவர்கள் கூப்பிடவில்லை; ராமனும் அயோத்தி திரும்பவில்லை என்பதுதான் உண்மை!

உள்ளபடியே, ராமனுக்கு அயோத்தியில் அரசனாக வீற்றிருக்க ஆசையில்லை என்று யாரும் கூறமுடியாது. அப்படி ஆசையில்லாவிட்டால், பதினான்கு ஆண்டுகள் கழித்து அவன் அரசனாக முடிசூட்டிக் கொண்டிருக்கமாட்டான். தந்தையின் ஆணையை — சத்தி

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

காதல் ராஜ்யம்

[தென்னரசு]

பொழுது புலர்ந்தது என்பதை விடி வெள்ளி அறிவித்தது. அடுத்து போர்களத்தை நினைவூட்டும் செவ்வானம் உருவாயிற்று. ஜெயம் பெற்றவீரனைப் போல செங்கதிரோன் முகம்காட்டினன். இருளின் இரும்புப்பிடி தளர்ந்தது. வழக்கப்படியே படுக்கையிலிருந்துகொண்டே பக்கத்தில் இருந்த தினசரிப் பத்திரிக்கையை எடுத்தேன். அயல் நாட்டுச் செய்திகளுக்கே முதல் பக்கத்தை ஒதுக்கியிருந்த அந்த 'முதல்தர'ப்பத்திரிக்கை அன்று மட்டும் ஏனோ தெரியவில்லை—மதுரை வக்கீல் மணவாளய்யங்காரின் மரணச் செய்தியை பிரசுரித்திருந்தது.

மணவாளய்யங்கார் மதுரையிலேயே பெரிய வழக்கறிஞர்—கொலை செய்த சம்பவத்தை நீதிபதியே பார்த்திருந்தாலும் கூட அதை அடித்துப்பேசி வெற்றிக்கு வழி தேடித்தரக்கூடிய 'புண்ணியவான்' அவர். வயல் சண்டை, வாய்க்கால் சண்டை; அதனால் ஏற்படும் களபலிகள், இவைகளுக்குத்தான் மணவாளய்யங்கார் ஆஜராவார். ஒவ்வொரு வேளையில் மணவாளய்யங்கார் 'எனக்குத்தான், உனக்குத்தான்' என்று வாதியும் பிரதிவாதியுமே போட்டி போட்டுக்கொண்டு அய்யங்காரின் 'இராமநிலையத்திலேயே ரகளை செய்வார்களாம்! இரண்டுபேர் சேர்ந்தாற்போல் ஒரு காய்கறிக்கடையை முற்றுகையிட்டாலே வெம்பிய கத்தறிக்காயும் விலையேறும் இந்தக் காலத்தில், வாதத்தினால் வஞ்சகனை வள்ளல் என்றும் நீசனை நீதிமானென்றும் உலகத்தை நம்பச் செய்யும் ஒரு வக்கீலுக்கு 'தொகை' ஏறுவதில் என்ன இருக்கிறது நாம் விந்தையுறுவதற்கு! அய்யங்காரின் தகுதி, ஒரு வழக்கிற்கு அய்யாயிரம், பத்தாயிரம் என்ருகி விட்டது! பொய் கணக்கு எழுதியவர்களின் துரோகம் படிந்த சொத்தும், போலி வேடதாரிகளின் பாவக்கறை ஏறிய செல்வமும் மணவாளய்யங்காரிடம் சேர்ந்தன. அப்பேர்ப்பட்ட வழக்கறிஞர் திடீரென்று இறந்துபோனர். திறமைசாலி ஒருவர் மறைந்தார் என்று உலகம் வருந்தியது. ஆனால் ஒரு சிலர் மட்டும் கண்ணீர் கொட்டினர்கள். "கயிலைநாதா உனக்கு இரக்கமில்லையா? காருண்ய மூர்த்தியைக்கொண்டு போய்விட்டாயே" என்று வாய் விட்டுப் புலம்பினர்கள். அவர்களெல்லாம் யார் என்று நினைக்கிறீர்கள்! அய்யங்கார் தனது கடைசி நாட்களில் நடத்துவதற்காக எடுத்துக் கொண்டிருந்த கொலை வழக்குகளின் 'கதாநாயகர்கள்' தான்! அவர்களுக்கு கவலை இருக்காதா என்ன? அய்யங்காரின் மறைவு அவர்களுக்கு 'ஆயுள் தண்டனை' யைத் தந்தாலும் தந்துவிடுமல்லவா!

"மணவாளய்யங்கார் அமரத்துவம் அடைந்தார்!" பத்திரிகையில் வெளியான இந்தத் தலைப்பு பலருக்கு ஐயத்தைக் கிளப்பிவிட்டது. 'நேற்று காலை அவரை அம்மன் சன்னதியிலே பார்த்தேனே' என்றவர்களுக்கும், 'மாலை ஐந்துமணிவரை வாடிப்பட்டி வழிபறி வழக்கை விசாரித்தாரே' என்றவர்களுக்கும் பலத்த சந்தேகம் ஏற்பட்டது. அவர்களின் சந்தேகத்திற்கும் ஆதாரமில்லாமலில்லை என்பதைக் காலம் நிரூபித்துவிட்டது. இதோ அந்த மர்மச் சாவின் காரண கர்த்தாக்கள் சொல்லுகிருர்கள் கேளுங்கள்.

மணவாளய்யங்கார்

அலமேலு மங்கை எனக்கு ஒரே மகள்-கண்ணைப்போல் காத்தேன் அவளை. ஆனல் அவள் மண்ணைத்தூவி விட்டாள் என் கண்ணில்.

அலமேலு குலக்கொடி-குடும்பத்திற்கு 'அடிவாழை' என்று கருதி அவள் மனம்போன போக்கெல்லாம் விட்டேன், அவள் கட்டுக்கடங்காத மஞ்சுவிரட்டு மாடாகிவிட்டாள்—[illegible] பிள்ளை என்று தட்டி வளர்த்தேன்—செய்த தவறுகளையும் மறந்தேன். காலக்கிரமத்தில் அடிபட்டு சேகரித்த என் குடும்பக் கௌரவத்தை நாடிப் பொருதில் பித்தெறிந்து விட்டாள்.

ஒரு நாள் நானும் என்து கட்சிக்காரர் ஒருவரும் எனது மோட்டாரிலேயே பிரபல ஓட்டல் ஒன்றுக்கு சிற்றுண்டி அருந்தச் சென்ருேம். அந்த ஓட்டலில் ஒரு இளைஞன் பரிமாறிக் கொண்டிருந்தான். பேசும் பொழுதெல்லாம் ஆங்கிலத்திலேயே பேசினன். அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை எனக்கு வளர்ந்தோங்கிவிட்டது. விசாரணையை தொடங்கினேன்.

"உன் பெயர்?"

"ராமானுஜன்"

"எவ்வளவு படித்திருக்கிருய்?"

"பி, ஏ. வரை படித்திருக்கிறேன்"

"ஏன் ஹோட்டல் வேலைக்கு வந்தாய்?"

"வேலை கிடைக்கவில்லை—நம்பியவர்களும் என்னை நட்டாற்றில் விட்டு விட்டார்கள்"

"நீ 'பிராமின்' தானே!"

"எஸ்" என்ருன் இளைஞன்.

"ஜாதி?"

"அய்யங்கார்!"

"வடகலையா? தென்கலையா?"

"வடகலை!"

விசாரணை முடிந்தது-வீடு வந்து சேர்ந்தேன், பெரிய கொலைவழக்கிற்குக்கூட நான் அவ்வளவு சிந்தித்ததில்லை. இரவு முழுதும் அந்த இளைஞனைப் பற்றியே சிந்தித்தேன். காரணம், அந்த நேரத்தில் என் ஜாதியில் வடகலையில் ஒரு பி. ஏ. கிடைப்பது அரிதாக இருந்தது.

அடுத்த வெள்ளிக்கிழமை ராமானுஜன் எனக்கு உதவியாளரானன் என்னிடம் வந்தது முதல் அவன் ஒரு புதுமனிதனாகிவிட்டான். அதோடு மட்டுமல்லாமல், எனக்குத் தோன்றாத யோசனைகளெல்லாம் அவனுக்குத் தோன்றும். எத்தனையோ வழக்குகளில் அவர் கூறிய ஆதாரங்களை வைத்துக்கொண்டு வாதாடி வெற்றி பெற்றிருகிறேன். சந்தர்ப்பமும், சூழ்நிலையும் கிடைக்காமல் இன்னும் எத்தனை ஆயிரம் பேர் ராமானுஜத்தைப் போல அடங்கி ஒடுங்கி இருக்கிருர்களோ என்று நான் அடிக்கடி எண்ணுவது உண்டு. இவ்வளவு நாள் ராமானுசம் அந்த ஓட்டலிலேயே இருந்திருந்தால் 'படி பாலுக்கு இத்தனை பவுண்டு காப்பித்தூள், இவ்வளவு சர்க்கரை' என்றுதான் அவனுடைய சிந்தனை வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

★

நாட்கள் வடமிழுக்க, மாதங்கள் வெள்ளை வீச, காலரத உருண்டது.

ராமானுசம் எனது மாப்பிள்ளை. நம்புங்கள்; என்மகள் அலமேலுமங்கை ராமானுசத்தின் மனைவி, சுற்றத்தார் என் போக்கைக் கண்டித்தார்கள். "ஊர் பெயர், தெரியாதவனுக்கு பெண்ணைக் கொடுக்கலாமா" என்று 'திண்ணைப் பேச்சு' நடத்தினர்கள். அப்போதெல்லாம் அந்தக் கேவலப் பேச்சுக்கள் என் காதில் புகவில்லை. அவனது திறமையைப் பெரிதாக மதித்தேன். கோயம்பத்தூரில் அரசாங்க அலுவலகத்தில் சூப்ரண்டெண்டாக உள்ள என் நண்பர் ரெங்கசாமிக்கு ராமானுசத்திற்கு வேலை வாங்கிக் கொடுக்கும்படி கடிதமெழுதினேன். ரெங்கசாமி உடன்பட்டார். மறுநாளே ராமானுசம் மனைவி அலமேலுவை அழைத்துக்கொண்டு கோவை புறப்பட்டான்.

ஒரு வாரம் ஆயிற்று. எந்த வெள்ளிக்கிழமையில் ராமானுசத்தை என் வீட்டுக்கு அழைத்து வந்தேனே, எந்த வெள்ளிக் கிழமையில் அவனுக்கு என் மகளை திருமணம் செய்வித்தேனே அதே வெள்ளிக் கிழமைதான் அன்றும்! நண்பர்ரங்கசாமி கடித மொன்று எழுதியிருந்தார். கடிதமா அது! பாராட்டுக் கடிதமென்று தான் நண்பர் ரங்கசாமி அந்தக் கடிதத்திற்கு தலைப் பிட்டிருந்தார். ஆனல் நான் அதை கடிதமென்று கருதவில்லை, ஜப்பானிய நகரமான நாகசகியை நாசமாக்கிய அணுகுண்டைக் காட்டிலும் கொடிய சக்தி வாய்ந்தது என்றுதான் சொல்லுவேன்

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

இராமரும்—தூதரும்!

★

"ஏதோ தனிப்பட்ட ஒரு சிலரின் நலனுக்காகவும் சிறுபான்மையினரைப் பாதுகாக்கவும் இந்த நாடகச் சட்டம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த எண்ணம் அவர்களுக்கு எப்படி உதித்ததோ தெரியவில்லை"

கனம்—சுப்ரமணியம்

டிச-24-கவுன்சில் கூட்டம்

❋

"இந்த நாடக மசோதா கொண்டு வரப்பட்ட சரித்திரமே தனி—அனைவருக்கும் விசதமானது. மிகுந்த அபாயகரமான அவதூருன நாடகம் தான் இந்த மசோதாவுக்குக் காரணம். அந்த நாடகம் சென்னையில் நடிக்கப்பட்டது."

—சி. இராஜகோபாலாச்சாரியார்

டிச. 24-கவுன்சில் கூட்டம்

புதையல்

மு. கருணாநிதி

நரபலி!

சாமியாரும் நாங்களும் கள்ளத் தோணி மூலமாகக் கடலைக் கடந்து தென்னாட்டுக் கரை வந்து சேர்ந்தோம், சாளுவநாயக்கன் பட்டிணத்திலே. கடற்கரையில் ஓங்கி நிற்கும் அந்த ஏழடுக்கு உப்பரிகையை நானும் தங்கையும் கண்டு மகிழ்ந்தோம். தங்கைக்கு அந்த உப்பரிகையை விட்டு அகலவே மனம் வரவில்லை. அதிலே ஏறிப் பார்க்க வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். சாமியாரும் எங்களை பத்திரமாக பாதுகாத்து, உப்பரிகையின் மேல்தளம் வரையிலே அழைத்துச் சென்றார். பெரியவரே! தங்களை முதன் முதலாக நாங்கள் சந்தித்த அந்த உப்பரிகையிலே நானும் தங்கையும் நின்று கொண்டு கடலைக் கண்டோம். களிப்பால் குதித்தது தங்கம். சாமியார் எங்களிருவரையும் கிண்டல்கள் பல செய்து உற்சாகப் படுத்திக் கொண்டேயிருந்தார். சாப்புக்கடைக்காரன் கூடத்தான், ஆடுமாடுகளுக்குத் தீனி போடுகிறான். மறுநாள் அவைகளை வெட்டி விற்பனை செய்யும் வரையில் அவை சாகாமல் இருக்க வேண்டுமே—அதுபோலத்தான் எங்களுக்கும் சாமியார் பல்வகை உபசாரங்கள் செய்தார், பிறகு, எங்களை மெதுவாக அழைத்துக் கொண்டு, நடந்தே புறப்பட்டார். நாங்களும் பின் தொடர்ந்தோம்.

அனாதையாக இலங்கைத் தீவிலே விடப்பட்ட எங்களை வாழ்விக்க வந்த மகான்—முன்னே போகிறார் என்ற நினைப்போடு, அவனை வாழ்த்திக் கொண்டே, தங்கையை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, நடந்தேன். தங்கையோ சிறுமி—பத்து வயதுக் கொழுந்து—எங்களோடு போட்டி போட்டு நடக்க முடியுமா?......... தள்ளாடியது—அதைக் கண்ட அந்த சாமியார், பரிவோடும், பாசத்தோடும் எங் தங்கையைத் தன் தோளில் தூக்கிவைத்துக் கொண்டான். ஆமாம், பெரியவரே, தங்கையைத் தோளில் வைத்துக் கொண்டார். அப்போது எனக்குத் தெரியாது அந்தப்பாவி, என் செல்வத்தைக் கூரான வாளிலும் வைக்கப் போகிறான் என்று!—பச்சைக்கதிர் அசைக்கும் வயல்கள், பசுமைக் கிளை நீட்டும் இளமரங்கள், இடையிடையே மடை கோலிப்பாயும் சிறு வாய்க்கால்கள், இவைகளையெல்லாம் ரசித்தபடி, நாங்கள் பயணம் நடத்திக் கொண்டிருந்தோம். அந்தச் சாமியார், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களைப் பற்றியும், அங்கேயுள்ள கோயில் குளங்களைப்பற்றியும் கதைகதையாய்ச் சொன்னான்.

அருகேயுள்ள நாடியம் என்ற கிராமத்தில் ஒரு மடாலயம் இருப்பதாகவும், அந்த மடாலயம் வட நாட்டுக்காரர்களுக்குச் சொந்தமானதென்றும்,வட நாட்டு மதத்தலைவர்கள் அங்கே பல தலைமுறைகளாக ஒருவர் பின் ஒருவராக மடாதிபதியாக இருந்து வருவதாகவும், அவர்கள் எல்லாம் தனக்குத் தெரிந்தவர்களே என்றும் அவன் கதையளந்தான் நாடியம் கிராமத்திலே மடம் இருப்பது உண்மை. அது வட நாட்டு மடாதிபதிகளின் ஆதிக்கத்தில் இருப்பதும்உண்மை. அந்த அதிபதி, தனக்கு நண்பர் என்று சொன்னானே; அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. பேசிக் கொண்டே மருங்கப் பள்ளம் கிராமம் வந்து சேர்ந்தோம்—அங்கேயிருக்கும் சிவன் கோயிலில் இன்றிரவு தங்கிவிட்டு, காலையிலே நாடியம் மடாலயத்துக்குச் சென்றுவிட்டு, பிறகு அந்த அதிபரின் சிபாரிசோடு, எனக்கு ஒரு நல்ல வேலை வாங்கித் தருவதாகவும், தங்கையை படிக்கவைப்பதற்கான வசதிகளைக் கவனிப்பதாகவும் அவன் சொன்னான்,

உலகத்தை வெறுத்துவிட்டு வெளிக்கிளம்பிய ஒரு துறவிக்கு, நாங்கள் இருவரும் ஒரு பாரமாக வந்துசேர்ந்தோமே; என்று நான் கவலைப்பட்டேன். "சுவாமீ! எங்களிடம் ஏன் இப்படி அக்கரை காட்ட வேண்டு—நாங்கள் யாரோ? தாங்கள் யாரோ?" என்று நான் வருத்தமுடன் கேட்டேன்,

"என்ன சொன்னாய் அப்பனே! நீ யார்? நான் யாரா?—நாம் எல்லோருமே ஆண்டவன்கள்! நாமே கடவுள்கள்! பல கூடுகளில் இருக்கும் ஒரே உயிர்! பல பாத்திரங்களில் ஊற்றப்பட்டுள்ள ஒரே பசுவின் பால்! ஒரு உயிருக்கு ஒரு இன்னல் என்றால், அந்த இன்னல் எல்லா உயிரையும் பாதிக்கும் இதை சாதுக்கள்மட்டுமே உணர்வார்கள். அப்படி உணர்ந்த சாது நான்! அதனால் தான் உங்களை வாழ்விக்க முற்பட்டேன்" என்று சாமியார் சொற்பொழிவு நிகழ்த்தினான்.

பிறகு, மூவரும் அங்குள்ள சிவன் கோயிலுக்குச் சென்றோம். இருட்டாயிருந்த போதிலும் விளக்கு, 'மினுக்—மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தது. கோயில் வாயிலிலே நின்றபடி சாமியார் கூப்பிய கரமுடன் பஜனைப் பாடல்களைப் பாடினான். அவனாகவே ஆடினான். ஆண்டவனோடு ஐக்கியமாகிவிட்டதாக நடித்த[...]
எங்களையும் பிரார்த்[...]
செய்து கொள்ளும்படி [...]
னான். தங்கை தங்கம், த[...]
பிஞ்சுக் கரங்களைக் குவித்[...]
ஆண்டவன் சன்னிதானத்[...]
பார்த்து, தேனொழுகும் ம[...]
மொழியால், "சாமி தா[...]
எங்க பாட்டி, எங்க அ[...]
எங்க அப்பா—எல்லாரை[...]
எனக்கு திருப்பிக்கொடு[...]
என்று கேட்டுக் கொண்[...]
தாமரை இதழிலே பனித்[...]
பட்டு சிதறுவதுபோல, [...]
தங்கத்தின் கன்னச்சரிவுகளி[...]
கண்ணீர்த் துளிகள் விழு[...]
சிதறியதை, அந்த மங்க[...]
வெளிச்சத்திலும் நான் [...]
டேன். என்னை நானே [...]
றிக் கொண்டேன்.

சாமியார், மூட்டைக[...]
வைத்திருந்த ஆகாரத்[...]
ஆளுக்குக் கொஞ்சம் சாப்[...]
டோம். "மிச்சம் வை[...]
காலையிலே சாப்பிடவேணு[...]
என்று கேலியாகச் சொன்[...]
என் கிளி! அப்யோ; அ[...]
கிளி அப்போது சாப்பி[...]
தான் கடைசிச் சாப்பாடு [...]
பதை உணரவில்லை, சாப்[...]
முடிந்ததும் — கோயி[...]
கெதிரே உள்ள மேடை[...]
நாங்கள் மூவரும் படுத்தோ[...]
நடந்து வந்த களைப்பு[...]
தூக்கமும் விரைவிலே[...]
வந்து எங்களை மயக்கத் து[...]
கியது. சாமியார், [...]
தோளிலே போட்டிருந்த நீண்[...]
பெரிய மூட்டையை [...]
இறக்கிவைத்துவிட்டு எ[...]
ளுக்குப் பக்கத்தில் படுத்[...]
கொண்டான். இரவு [...]
திலே உலவக் கிளம்பும் தவ[...]
களின் சங்கீதமும், பற[...]
களின் ஒலியும், வயற்பு[...]
களின் ஒலியும்—பயங்கரமாக[...]
தானிருந்தன. நான் தங்கை[...]
அணைத்தபடி படுத்துக்கொ[...]
டேன். தங்கை பயப்படுகிற[...]
என்பது மட்டும் எனக்கு[...]
தெரிந்தது. "பயமா?" என்[...]
கேட்டால், அதிகமாகப் ப[...]
படுமே என்று எண்ணி கே[...]
காமலே யிருந்துவிட்டே[...]

த்திலே வேறுயாருடைய
ாவது இருந்தால், அங்கு
ரய்ப் படுத்துத் தூங்கலாமே;
று சாமியாரைக் கேட்
ன்.

இந்த ஊர் பொல்லாத
ரப்பா!—அங்கெல்லாம்
கவே கூடாது!—அதுவும்
த்திரி நேரத்திலே மிகவும்
த்து" என்று சாமி, பதில்
ன்னுன். எவையெவை
யோ எண்ணிக்கொண்டே
ங்கிவிட்டேன்.

டுநிசியிருக்கும்—அப்போது
க்கென்று விழித்தேன், என்
ணப்பிலே தூங்கிக்கொண்
ருந்த தங்கையைக் காண
லே, அதிர்ச்சியடைந்து,
யைத் தூக்கிப் பார்த்தேன்.
மியாரையும் காணவில்லை.
ந்து உட்கார்ந்தேன். கூச்ச
வேண்டும்போல் தோன்றி
. கூச்சலிட்டேன்—கூவி
ன்—அலறினேன்—ஆனால்
தக் கூச்சலும், அலறலும்
காதுக்கே கேட்கவில்லை.
மட்டும் திறந்திருக்கிறதே
ர், ஒலி எழும்பவில்லை
று எனக்கே புரிகிறது.
களை இறுக மூடிக்கொண்டு
ன நானே தைரியப்படுத்
கொண்டேன். படபட
ன்று ஆடியது என் இளங்
கம். "டக் டக்!" என்று
தயம் துடிப்பதை நான்
ருகக் கேட்க முடிந்தது.
ந்துவிட்டேன். நின்றேன்;
லயா—என்று நிதானித்
கொண்டேன். ஒரு அடி
த்துவைத்தேன். கண்களை
ல விரித்துப் பார்க்க முடிந்
பார்த்தேன். ஒரு ஒலி
ட்டது. கவனித்தேன்.
முவானுக்கும், தொழுவா
கும் இடையிலே—காக்கா
கு நிழலிலே—பசும்பொன்!
ம்பொன்!! பசும் பொன்!!!"
ற வார்த்தைகள் திரும்பத்
ம்ப ஒலித்துக்கொண்டிருந்

ந்த அமைதியும், அதே
த்தில் பயங்கரமும் கலந்த
லே, இதுபோன்ற
யை, ஒரு இளைஞன் அனு
யாக நின்றுகொண்டு,
பதென்றால் முடிகிற
மா? மனதைத் தைரியப்
திக்கொண்டேன். மெது
ஒலி வந்த பக்கம்
னேன்,

தேவீ! உன் காணிக்
யை கொடுத்துவிட்டேன்.
னுமா தாமதம்! நரபலி
டுத்தும், இந்த நாயை
திக்கலாமா? — புதையல்
டும்! புதையலைக்கொண்டு
காட்டு! தாயே! தாயே!!
கே புதையல்? எங்கே
யல்?" என்ற வார்த்தை
என்னைக் கலக்கின. கொஞ்
வேகமாக அடியெடுத்து வைத்தேன். ஒரு விளக்கு எரிந்தது. கூர்மையாகப் பார்த்தேன், துரை, இப்போது கதையைத் தொடர முடியாமல் தத்தளித்தான், அவன் உதடுகள் நடுங்கின. கண்கள் குளமாயின. பரிமளாவின் மெல்லிய, பூப் போன்ற உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அங்குமிங்கும் உலவியபடி துரையின் கதையனைத்தையும் ஆழ்ந்த சிந்தனையுடன் கவனித்து வந்த மாயாண்டிக் கிழவர் அசைவற்று சிலைபோல நின்றார். துரை என்ன சொல்லப்போகிறான், என்பதை கிழவரும், பரிமளாவும் ஆவலோடு, அதே நேரத்தில் அழுகின்ற நெஞ்சத்தோடும் எதிர்பார்த்தார்கள். துரை தொடர்ந்தான்.

"மங்கலான விளக்கு ஒளிக்குப் பக்கத்திலே சாமியார் உட்கார்ந்திருந்தான். அவன் கையிலே ஒரு ரத்தம் தோய்ந்த அரிவாள் இருந்தது. அந்த அரிவாளைத்தான, அவன் அந்த பெரிய மூட்டையில் ஒளித்திருந்தான் போலும்—ஆனது ஆகிவிட்டது இனி என்ன? என்ற முடிவோடு, சாமியாரின் பின்னே சென்று இன்னும் கவனமாகப் பார்த்தேன். என் தங்கையின் உடல் இரண்டு துண்டுகளாகக் கிடந்தன. தங்கத்தின் தலைவேறு, முண்டம் வேறாக, ரத்தம் சொட்டியபடி கிடந்த காட்சியை நான் கண்டேன். அருமைமிகு தங்கையின் அழகோவியம் இப்படி அலங்கோலமாக்கப்பட்டுக் கிடப்பதை எந்த அண்ணனால் தான் சகிக்க முடியும். கத்தினேன்—முன்போலவே வாய் அடைத்துக் கொண்டது. கண்கள் மங்கிவிட்டன, ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை.

அம்மா, சீவிச்சீவி சிங்காரிப்பார்களே; அந்தத்தலை வெட்டுண்டு கிடந்தது. பாட்டியின் முத்தங்களைப் பெற்றுப் பெற்று சிவந்துபோகும் அந்த ரோஜாக் கன்னங்கள், அழகு விழிகள், அது காட்டும் குறும்புப் பார்வை—எல்லாமே—ஆமாம் என் தங்கையே—எல் செல்வப் பேழையே—நொறுக்கப் பட்டுவிட்டது. முன்னேக்கி நடப்பதாக எண்ணிக் கொண்டே, பின்னால் வெகு தூரம் வந்து ஒரு மரத்தில் மோதிக்கொண்டேன். அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது. நின்றபடி யோசித்தேன், இனி தங்கை பிழைக்க முடியாது—துண்டாகி விட்டது—மேற்கொண்டு என்ன செய்யலாம்; இந்தத் துரோகியை எப்படித் தண்டிக்கலாம் என்று யோசித்துக் கொண்டேயிருந்தேன். "சரி! இவனையும் இதே இடத்தில் வெட்டிச் சாய்ப்பது!" என்ற முடிவோடு அவன் பக்கம் நடந்துவந்தேன். அப்போது அவன், அங்குள்ள ஒருகுழியில் தங்கையின் சிதைந்த உடல்களைப் போட்டு, மண்ணால் மூடிக் கொண்டிருந்தான்.

தங்கைக்கு இறுதிச் சடங்கு நடைபெறும் காட்சியை, அண்ணன் பார்த்துக்கொண்டே நின்றேன். இனி என்ன; நான்மட்டுமே மிச்சம்! — அவனைத் தொலைக்க வேண்டும் -முடியா விட்டால் அவனைத் தொலைக்கும் முயற்சியிலேயே சாக வேண்டும்; என்ற முடிவோடு, அவனருகே பூனைபோல நடந்து வந்தேன். அவன், தங்கையை நன்றாகப் புதைத்துவிட்டு, தன் எதிரிலே வைத்திருந்த ஒரு காளி சிலையோ, அல்லது வேறு ஒரு பயங்கரமான சிலையோ; சரியாகத் தெரிவில்லை—அதன் முகத்தில் காரித் துப்பினன்— "அடி சண்டாளி! உன்னை நம்பி, நீ புதையலைக் காட்டு வாய் என நம்பி, நரபலிக்கு அலைந்து திரிந்து, கொண்டு வந்தேனே—நீ ஏமாற்றி விட்டாயே!" என்று அந்த சிலையைக் கீழேபோட்டு காலால் உதைத்தான். "புதையல் எங்கே புதையல்?" என்று கத்திக்கொண்டே சிலையைத் தூளாக்கினன். அவன் கவனமெல்லாம் சிலையின் மீது திருப்பியிருந்த அந்த நேரமாகப் பார்த்து, நான் அவனிடம் ஓடி அங்கிருந்த கொடிய அரிவாளைக் கையிலே தூக்கினேன். சாமியார் திடுக்கிட்டான். ஓடினன், நான் துரத்தினேன். ஒரே வெட்டு! அவனைத் தொலைத்துவிடலாமென்று துடித்தேன்,

ஓடிக்கொண்டிருந்த சாமியார், அய்யோ என்று அலறினன். அதற்குள் நான் அவனிடம் போய்விட்டேன். அவன் என் அரிவாளுக்குத் தப்பி, அங்குள்ள பாழும் கிணற்றில் கால் தவறி விழுந்து விட்டான். கிணற்றுமேல் நின்றுகொண்டு, உற்று நோக்கினேன். சப்தம் வருகிறதா என்று கவனித்தேன். "ஐயோ! ஐயோ!" என்று முனகல் கேட்டது.

பிறகு, அதுவுமில்லை. வெளியே இருந்த பெரும் பெரும் கற்களைத் தூக்கி கிணற்றுக்குள்ளே போட்டேன். பிறகு, என் தங்கை புதைக்கப் பட்ட இடத்திற்கு வந்தேன். அழுதேன—அந்த மண்ணை முத்தமிட்டேன். புதையுண்ட என் கண்மணியை மீண்டும் தோண்டி எடுக்க விரும்பவில்லை. அரிவாளில் ஒட்டிக் கொண்டிருந்த என் தங்கையின் ரத்தத்தை முத்தமிட்டேன். கண்களில் ஒத்திக் கொண்டேன். பிறகு அந்த அரிவாளையும், சாமியார் விழுந்துகிடந்த கிணற்றுககுள் போட்டேன்.

அதன்பின் நான் அங்கே நிற்கவில்லை—கால்போன பக்கம் நடந்தேன்.

[வளரும்]

குறித்துக் கொள்ளுங்கள்!

1953-ல், இந்திய ரயில்வேக்கள் மொத்தம் 1,04,25,007 டன் நிலக்கரியை உபயோகித்தன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் புதிய விமான நிலையங்களையும் அதற்கான பாதைகளையும் கட்டுவதற்காக, இதுவரை மொத்தம் 15.58 லட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

1954 செப்டம்பர் மாதத்தில் இந்தியாவின் ஏற்றுமதிகளின் மூலம் கிடைத்த வருமானம் 50 கோடி ரூபாயாகும். 1954 ஜூன் மாதத்திலிருந்து அதுவரையில் கிடைத்துவரும் சராசரி மாத வருமானம் 46 கோடி ரூபாயாகும்.

1954–55-ம் ஆண்டில் (1954 செப்டம்பர் மாதம் வரை) சப்ளை—விற்பனை டைரெக்டர் ஜெனரல் வாங்கியுள்ள யந்திர சாதனங்களின் மொத்தப் பெறுமானம் 4.88 கோடி ரூபாயாகும். 1953–54-ம் ஆண்டில் மொத்தம் 7.31 கோடி ரூபாய்க்கு யந்திர சாதனங்கள் வாங்கப்பட்டன.

குண்டு வீச்சு!

[விமானி]

எதிர்ப்பை பெரிதாக்கிக் காட்டியோ, அல்லது எதிரியை மாவீரனாக சிருஷ்டித்தோ தன்னை 'ஹீரோ' வாக்கிக் கொள்வோர் இன்றைய அரசியலில் மலிந்து விட்டார்கள். இச் செயல் கண்டு 'ஆகா, அப்படியா' போடுகிறவர்கள் அப்—பிராணிகளாகத்தானிருக்க வேண்டும்—அரசியல் ஞானமுள்ளோர் இதை 'சுய விளம்பரம்' என்று தான் சொல்லுவார்கள்-கொஞ்சம் கவுரமாகச் சொல்ல வேண்டுமானல் 'நமது அந்தஸ்த்துக்கு உகந்த தல்ல' என்பார்கள். அவ்வளவு தான் !

மந்திரி சுப்ரமணியம், தனக்கொரு பித்துக்குளி மிரட்டல் கடித மெழுதியிருப்பதை பெரிதாக எண்ணி—பத்திரிகைகளுக்கெல்லாம் செய்தியை அனுப்பியிருக்கிருர். மிரட்டல் கடிதம் பொது வாழ்வுக்கு அரிச்சுவடி போதனை என்பதைஅமைச்சரும் அறிவாரே;அப்படியிருக்க இந்தக் கடிதத்தை பெரிதாக்கிக் காட்டக் காரணம் என்ன என்கிறீர்களா? கடித மெழுதியுள்ள அந்த 'அநியாய புத்திசாலி' காமராசர் காப்பாற்றப்படுவார் என்று எழுதியிருக்கிருர். அது தான் சுப்பிரமணியருக்கு புளியங் கொம்பாகிவிட்டது. அதைக் காட்டிக் காட்டித்தான் மாம்பலத்தையும் மயிலாப்பூரையும் வசப்படுத்த முயலுகிருர் என்று சொல்லப்படுகிறது.

★ ★ ★

கனம் சுப்ரமணியம்தான் கடிதத்தைக் காட்டி கடைவிரிக்கிருர் என்ருல் கவர்னர் கூடத்தான் அவருக் கேற்றபடி-தெரிந்த வழியில் வலைவீச முற்பட்டிருக்கிருர். முன்பொரு முறை இப்படித்தான் ஆச்சாரியார் 'சீசனி'ல் என்னுடைய கோச் வண்டியையும், வில்வெட் குடையையும் விற்று விட்டார்கள்; எனக்கு அதிகாரமேயில்லை என்று நீலிக் கண்ணீர் வடித்தார். அதே போல் தான் சென்ற வாரமும் சென்னையில் ஒரு கூட்டத்தில் "ராஜ்ய கவர்னர்கள் யோசனையோ புத்திமதியோ கூற முடியாது. குடியரசுச் சட்டம் அனுமதிக்காது; உங்கள் யோசனையைத்தான் நான் கேட்க வேண்டும்" என்று மனம் வெதும்பிச் செல்லுவது போல நடித்திருக்கிருர்.

சென்னை மாகாணத்தவர்கள் புத்திசாலிகள் என்று ஸ்ரீ பிரகாசா அவர்கள் பல முறை சொல்லி விட்டார். ஆனல் அவருக்கே இன்னும் புலப்படவில்லை எனக்கு அதிகாரமில்லை, அதிகாரமில்லை என்று சொல்லிக் கொண்டே பெரிய பெரிய அவசரச் சட்டங்களைப் போடுகிறேமே, என்ருவது இந்த புத்திசாலி சென்னை மாகாணம் இதைக் கேட்டுவிடுமே" என்று. தேவையைக் கேட்கும் போது 'தெரியாது; எனக்கு அதிகாரம் கிடையாது' என்பதும் எதிர்ப்பு தேடி வரும்போது 'ரத கஜதுரக பதாதிகளை' ஏவுவதும் வடக்கத்தி சாகசங்களில் ஒன்று என்பது சென்னைக்கு புதிரல்லவே!

★ ★ ★

சர்ச்சிலுக்கு எங்காவது யாராவது வரவேற்பு நடத்தினல் புகழ்வார்களாம் அவரை—எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு கடைசியில் நன்றி கூறுகையில் விருந்து நடத்தியவர் 'ஏன் சர்ச்சிலுக்கு விருந்து நடத்தினேம்' என்று வருந்தும்படி குறைகளை வினயத்தோடு சொல்லிவிட்டுப் போய்விடுவாராம் சர்ச்சில். அந்த முறையைப் பின்பற்றுவதில் டிட்டோ கை தேர்ந்தவர் போலும்.

இந்தியாவுக்கு வந்திருக்கும் யூகோ குடியரசுத் தலைவர் டிட்டோ, டில்லி வட்டாரத்தில் சுற்றுப் பயணம் செய்கையில் கிராமத்திலுள்ள ஒரு குடிசைக்குள் புகுந்து சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கிருஷ்ணன் படத்தைப் பார்த்து சிரித்தாராம்.

அந்த ஐரோப்பியச் சிரிப்பு என்ன பொருளைத் தன்னகத்தே கொண்டதோ! சுவற்றிலே தொங்கிய படம் ஆலிலை மேல் கிருஷ்ணனக இருந்தால் கலைக்கும் — கருத்துக்கும் சம்மந்தமே இல்லையே, கடலுக்கு மேலே செங்குத்தாக ஆலிலை—ஆலிலை மேலே ஒரு பாலகன்-கற்பனைக்கும் எட்டாததாக இருக்கிறதே என்று சிரித்திருப்பார். அல்லது அந்தப் படம் நீராடும் மங்கையரை கண்ணன் மரத்திலிருந்து பார்க்கும்படமாக இருந்தால்,இப்படிப்பட்ட அயோக்கியத்தனம் செய்பவனையா நமது நேருவின் நாடு 'காடா'கக் (கடவுள்) கருதுகிறது! ஷேம்! ஷேம்! என்று மனதுக்குள்ளே எண்ணி சிரித்திருப்பார்—ஓவியக் கலையை உயர்வு என்று எண்ணி மட்டும் டிட்டோ ஒரு போதும் வியந்திருக்க மாட்டார் — டிட்டோ என்ன இமயத்தின் அடிவாரத்து முனிவரா?

காதல் ராஜ்யம்.....

○ 5-ம் பக்க தொடர்ச்சி

இதோ படியுங்கள் !

அன்புடையீர் ! வணக்கம்.

தங்கள் மகளும், மகனும் வந்து சேர்ந்தார்கள். மாப்பிள்ளை மாசிலாமணி கடமையைச் சரிவரச் செய்துவருகிருர். நிற்க,

காலத்திற்கேற்றவாறு உங்களின் கருத்தோட்டத்தை மாற்றிக் கொண்டது குறித்து மிக்க மகிழ்ச்சி! நீங்கள் இவ்வளவு விரைவில் இப்படி மாறி விடுவீர்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. நீங்கள்தான் சரியான தேசியவாதி! உங்கள் மாப்பிள்ளை ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஜாதிக்கேற்ற அறிவுதான் என்ற வர்ணச்சிரமத் தத்துவத்தைத் தகர்த்தெறிந்த நிர்வாகத் தகுதியுடையவர்.'நாங்கள் வைதீகர்கள் பிராமணர்கள்' என்று சொல்லிக் கொள்பவர்கள்கூட அவரைப் போல சுத்தமாக இருக்கமாட்டார்கள்.

வாழ்க சீர்திருத்தம்! வளர்க பொது நெறி !

தங்களன்புள்ள
ரெங்கசாமி

கடிதத்தைப் படித்து முடித்ததும் என் தலை சுற்றியது. கண்கள் இருண்டன. கோவைக்குப் புறப்பட்டுவிட்டதாக ரெங்கசாமிக்கு தந்தி கொடுத்துவிட்டு ரயிலேறினேன்.

கோவை ரயில் நிலையத்தில், என்னைக் கூட்டிச்செல்ல வந்திருந்த ரெங்கசாமியின் காரில் அவருடைய பங்களாவுக்குச் சென்றேன். ரெங்கசாமி என்னை அன்போடு வரவேற்று விஷயத்தைச் சொன்னர். அவர் சொன்ன அந்தக் கதை எனக்கு நல்ல வழியைக் காட்டவில்லை. சாவுப் பாதையை வகுத்துக் காட்டியது............?

ராமானுசன்

நான் ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்தவன். என் தந்தை வைணவ பக்தர். ராமானுசரின் கொள்கையைப் போற்றுகிறவர். கஷ்டப்பட்டு பி. ஏ. வரை படித்தேன். ஆனல் வேலை கிடைக்கவில்லை. தக்க சமயத்தில் தந்தை காலமானர். 'வாழ்வை நம்பாதே வையகம் அநித்யம்' என்று கூறும் வீணர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல நான். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற வைர இலட்சியம் என் இதயத்தில் இடம் பெற்றிருந்தது. எனவேதான் துணிவு கொண்டேன்.

கல்லூரி நாடகங்களில் சாணக்கியனக நடித்து சபையோரின் 'சபாஷ்' பட்டம் பெற்றிருக்கிறேன். கங்குப்பட்டனக நடித்தால் நான் வந்துபோகும்போதெல்லாம்' கைதட்டலு'க்குப் பஞ்சமிருக்காது. அந்தப் பழக்கத்தின் உதவியால் ஒரு பார்ப்பன ஓட்டலில் 'சர்வராக'ச் சேர்ந்தேன். என்னுடைய பேச்சும் நெற்றியிலே தீட்டியிருந்த நாமமும் எளிதில் என்னை ஒரு பார்ப்பனனக நம்பத் தூண்டின.

நாட்கள் ஓடின. பழுத்த காங்கிரஸ்காரர் மணவாளய்யங்காரின் மருமகனனேன் — பெருமை பெற்றேன். அலமேலு மங்கையைப் போன்ற ஒரு கட்டழகி எனக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்ப்பாளென்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அவளுக்காக என் உற்ருர் உறவினர் அனைவரையும் புறக்கணித்தேன்.

எனக்கு மணமான் மறு ஆண்டே என் மாமனர் மணவாளய்யங்கார் கோவையில் சர்க்கார் காரியாலயத்தில் வேலை வாங்கித் தந்தார். அப்போது தான் என் உண்மைநிலை வெளியாயிற்று. சூப்ரண்டெண்ட் ரங்கசாமி எனது கல்லூரிசர்டிபிகேட்டைப் பார்த்தார். எனது ஜாதியைக் கண்டு கொண்டுவிட்டார். மறுநாளே மதுரைக்குக் கடிதம் பறந்தது. அலமேலுவிடம் விஷயத்தைச் சொன்னேன்.

"ஓடிப்போய் விடுவோம்" என்ருள்.

"எங்கே" என்றேன்.

"சென்னைக்கு!"

புறப்பட்டுவிட்டோம்,ஆனல் நாங்கள் எவ்வளவு விரைவாக சென்னைக்குச் சென்ருேமோ அவ்வளவு விரைவாகவே அடுத்த வெள்ளிக்கிழமை மதுரைக்குத் திரும்ப வைத்துவிட்டது என் மாமனரின் மரணச் செய்தி! ஆனல் என் மாமனரின் உயிரைக் குடித்தது அவரது 'ராமநிலையம்' பங்களாவில் இத்தனை காலமும் பூத்துக்குலுங்கி அவரது-பூஜைக்கும் பயன்பட்ட அந்த அரளிச் செடியின் வேர்ச் சாறு என்பது எங்களுக்கு மட்டும்தான் தெரியும்.

★ ★ ★

மணவாளய்யங்காரின் சொத்துக்கு மாசிலாமணி செல்லப் பிள்ளையானன்.

இராம நிலயம் பங்களாவில் மாசிலாமணி— அலமேலுமங்கை காதல் ராஜ்யம் தொடங்கியது.

●

★ எண்ணித் துணிக! ★

சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

நம்மில் அனேகர் முன் யோசனையில்லாமல் சில செயல்களை செய்து விடுவோம். அந்த அவசர புத்தியால் விளையும் ஆபத்தைக் கண்டு பின்னால் 'ஓ' என்று அலறுவோம். அந்த ஆபத்தை வர விடாமல் தடுத்துக் கொள்ள முடியும். அதற்கு ஒரேவழி; எதையும் செய்யுமுன யோசிக்க வேண்டும்; சிந்திக்க வேண்டும்; அதைப் பற்றி எண்ண வேண்டும்.

குறளில் முன்யோசனையைப் பற்றி சில மணியானபாடல்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றை வைத்து இந்த வாரம் ஒரு கதை சொல்லுகிறேன்; படியுங்கள்:

★ ★ ★

காலை நேரம்! அந்தக் கட்டிடத்தின் வாசலில் ஒரே கூட்டம். எல்லோரும் சிறுவர்கள் தான். அதென்ன, விளையாடுமிடமா? அல்லது ஏதேனும் விழா நடக்குமிடமா? அல்ல, அது பள்ளிக்கூடம் தான்.

அங்குக் கூடியிருக்கும் சிறுவர்களின் முகத்தில்தான் எத்தனைக் கலவரம்! கவலை! காரணம் என்ன என்று கேட்கிறீர்களா? அன்று அவர்களுக்கு சிரிப்பையோ அல்லது அழுகையையோ தரக் காத்துக் கொண்டிருந்தது அந்தப்பள்ளிக்கூடம். அவர்களது ஒரு வருட படிப்பிற்கு முடிவு தெரியும் நாள். புரிந்திருக்கலாம், பரீட்சை முடிவு தெரியும் நாள் அன்று.

கேட்க வேண்டுமா மாணவர்களின்கூட்டத்திற்கு? 'எனக்கென்ன கவலை? நான்தான் படிப்பில் புலியாயிற்றே?' என்ற தைரிய நினைவுடன் சிலகெட்டிக்காரத் தம்பிகள்—"என்ன ஆகுமோ? ஏதாகுமோ?" என்ற சந்தேகத்தில் கலங்கிய வண்ணம் சில பயந்தாங்கொள்ளிகள் — '..ம்..காத்திருந்ததுஎன்னபலன்? படித்தால் அல்லவா பலன் கிடைக்கும்...அடுத்த வருஷம் ஒரு கை பார்த்துக்கலாம்' என்ற தைரியத்துடன் சில மண்டுகள்—இப்படியாக ஏகக் கூட்டம்.

அத்தக் கூட்டத்தில் ஒருவனாக நின்று கொண்டிருந்தான் கண்ணன். அவன் முகத்தில் ஒரே கவலை. அவன் நன்றாகப் படிப்பவன் தான்; வகுப்பில் முதன்மையானவன் தான்— இருந்தாலும் அர்த்தமில்லாத பயம் அவனை வாட்டிக் கொண்டிருந்தது. பரீட்சையில் 'பாஸ்' செய்துவிட்டது போலவும், அப்பாவும் அம்மாவும் வாரியணைத்து முத்தம் தருவது போலவும்— தோல்வியுடன் வீட்டுக்குத் திரும்புவது போலவும், கோபக்கார முரட்டு அப்பா "மாடு மேய்க்கப் போடா, மடையா!" என்று திட்டுவது போலவும், அடிப்பது போலவும், என்னென்னவோ எண்ணி எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தது அவன் மனம்.

திடீரென்று பள்ளிக்கூடத்தின் முதல் அறையில் பரபரப்பு தோன்றியது தேர்வின் முடிவுகள் அச்சிட்ட காகிதத்தை ஒட்டி விட்டார்கள், பள்ளி அதிகாரிகள். அவ்வளவுதான், சிறுவர்களின் படை அந்தஅறை வாயிலை நோக்கி வேகமாகத் தாவியது. கூட்டத்தில் இடிபட்டு—அடிபட்டு கண்ணனும் அறை வாயிலை நெருங்கி விட்டான்.

அதோ, தேர்வு முடிவுகள் அச்சிட்ட காகிதமும் அவன் கண்களில் தென்பட்டுவிட்டது. கண்ணன் கூர்ந்து கவனித்தான். அவன் நெஞ்சில் ஒரே படபடப்பு; துடிதுடிப்பு! 'எட்டாவது வகுப்பு' என்ற தலைப்பும் அவன் அவசரக் கண்களில் தென்பட்டன. கண்ணனின் பெயர்...?பார்த்துக் கொண்டே வந்தான் அதோ, அவனுடைய பெயர்! கொட்டை எழுத்திலே 'கண்ணன்' என்ற பெயர்! ஆனால்...?அந்தப் பெயரின்மேல் 'பளிச்' சென்று தெரிந்தது சிவப்புக் கோடு! 'ஆ' என்று அலறிவிட்டான் கண்ணன். ஏன் தெரியுமா? அந்தச் சிவப்புக் கோடு, அவன் தேர்வில் தோல்வியடைந்ததைத்தான் சொல்லிக் கொண்டிருந்தது!

கண்ணன் துடித்துவிட்டான். அவன் உடல் 'குப்' பென்று வியர்த்தது. 'தோல்வியா? எனக்கா? ஐயோ!' என்று முணமுணத்தான். சற்று நேரம்ஏதும் புரியாமல் அங்கேயே நின்றான். முண்டியடித்துக் கொண்டு முன்னால் பாய்ந்த கூட்டம் அவனை வெளியே கொண்டு வந்து தள்ளியது. கண்ணனின் கண்களில் நீர் — உள்ளத்தில் ஏக்கம்—அவன் மெதுவாக நடந்தான். நடக்கவில்லை;காற்று தான் அவனைத் தள்ளிக்கொண்டு வந்தது.

வெற்றியடைந்த தம்பிகளின் கொண்டாட்டமும் கும்மாளமும் கலந்த கூச்சல் அவன் காதுகளில் விஷமாகப் பாய்ந்தன. கண்ணனுக்கு வேண்டாதச் சிறுவர்களின் கிண்டல்களும் — கேலிகளும்—

"டேய்! கண்ணன் 'கோட்' அடிச்சுட்டானுமே!"

"பின்னே என்னடா! தலைகனம் புடிச்சவனுக்கெல்லாம் அதான் கதி."

அப்பப்பா! கண்ணன் காதுகளைப் பொத்திக் கொண்டவன் வெளியே வந்தான். நடந்தான் எங்கே? அது அவனுக்கே தெரியாது. வீட்டுக்குப் போனால் அப்பாவின் கோபம் அவனை சும்மா விடாது! அடிக்கச் செய்யும்; உதைக்கச் செய்யும்; எப்படி வீட்டுக்குச் செல்வது— இப்படி எண்ணியது அவனது ரோசக்கார மனம்.

'இன்னும் ஒரு வருஷம் படித்தால் தான் என்ன? எதிர்பாராத தோல்விதானே இது! அடுத்த வருஷம் அதிக மார்க்குகள் வாங்கி வெற்றியடைந்தால்...? இப்படி எண்ணினான் அவன். ஆனால்,

"அட முட்டாளே! வெட்கம் இல்லாதவனா நீ! எப்படி உன் அப்பா அம்மாவின் முகத்தில் விழிப்பாய்? அது போகட்டும் பள்ளிக்கூடத்தில் மட்டும் உனக்கு நிம்மதியா கிடைக்கும்? வெற்றியடைந்த பையன்களின் ஏச்சுகளும் பேச்சுகளும் உன் உயிரையே பறித்து விடுமே! ஆமாம்!...நீ மீண்டும் படிப்பதை விட—மீண்டும் தோற்றவனாக வீட்டுக்குச் செல்வதை விட சாவதே மேல்!" இப்படி சாட்டையடி கொடுத்தது அவனது ரோசக்கார மனம்.

"என்ன?"-என்று கத்தினான் கண்ணன்.

"சாவதே மேல்" — 'சாவதே மேல்"—என்று மனது அடித்துக் கொண்டிருந்தது.

கண்ணன் அப்போதுதான் ஊருக்கு வெளியே வந்து விட்டதை உணர்ந்தான். நடந்தான். "வெட்கம் கெட்டவனா நீ! இனியும் படிப்பதை விட சாவதே மேல்!" என்று மனம் உறுமிக் கொண்டேயிருந்தது. கண்ணன் நடந்தான். வேகமாக நடந்தான். ஓடினான். எதிரே தோன்றிக் கொண்டிருந்த பெரிய குளம் அவனை "வா வா" என்று அழைத்தது. கண்ணன் ஓடினான். அவன் நெஞ்சு படபடத்தது; கால்கள் துடிதுடித்தன. வேகமாக குளத்தில்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

மகிழலாம்!

அருமைக் கைகள்முட்களால்
அவதிப் பட்ட பின்புதான்
அழகு ரோஜா மலரையே
அடைந்து நாமும் மகிழலாம்!

சோர்வு கொள்ள கால்களும்
சேற்றில் அலைந்த பின்புதான்
ஆர்வம் கொள்ள தாமரை
அடையப் பெற்ற மகிழலாம்!

புயலின் கோரம் நெஞ்சிலே
புகுந்து விட்ட பின்புதான்
பயத்தை விட்டு அமைதியை
பார்த்துப் பார்த்து மகிழலாம்!

துன்பம் உற்ற போதினில்
துணிந்து ஏற்ற பின்பு தான்
இன்பம் பெற்று என்றுமே
இனிது வாழ்ந்து மகிழலாம்!

— ஆரூர் அமிர்தம்.

அடுத்த இதழில்

மு. க. தீட்டும் சிறுகதையும், குறளோவியமும் தவருது இடம்பெறும்.

சக்ரவர்த்தி...

★ 4-ம் பக்க தொடர்ச்சி

பத்தை மீறிய நாஸ்திகனுக ராமன் இங்கேமாறிவிட்டான் தந்தை, ராஜ்யத்தைப் பரதனுக்குத்தானே கொடுத்தார். பதினுன்கு ஆண்டு கழித்து மீண்டும் ராமனே நாடாள வேண்டும் என்று கூறியது யார்? வரம் கேட்ட கைகேயியும் கூறவில்லையே!— பரதனுக்குரிய நாட்டை, சத்தியத்தை மீறி ராமன் அடைந்தது எவ்வாறு பொருந்தும்? நாட்டை மீண்டும் பெறுவதற்கு வசிஷ்டரும், ராமனும் எவ்வளவு சதி நினைப்போடு பேசியிருக்கிருர்கள் என்று ஆச்சாரியாரே எழுதுகிருர்; காண்க!

ராமன் கூறுகிருன்: "தம்பி, நான் தந்த ராஜ்யமாகவே எண்ணி, நீ ஒப்புக்கொண்டு தந்தை சொற்படி நட!"

பார்த்தீர்களா; ராஜ்யத்துக்கு ராமன் மறைமுகமாகக் கொண்டாடும் உரிமையை! தசரதன் அளித்த வாக்குப்படி நாட்டுக்குரியவன் பரதன்! ஆனல், ராமனே; வெகு லாவகமாக—மிக நளினமாக—அது— "தான் தந்த நாடு" என்று கூறுகிருன் பரதனிடன்! தந்தையினுல் பரதனது நாடு என்று சொல்லப்பட்டதை, தன்னுடைய நாடு என்று கூறிக்கொள்ள எவ்வளவு தைரியமும், சத்தியம் மறந்த தன்மையும் இருந்திருக்க வேண்டும்; அவதார புருஷன் அயோத்தி ராமனுக்கு! வசிஷ்டன் பேசுகிருன் பாருங்கள்!

"பரதா! ராமனுடைய அதிகாரத்தைக் கொண்டு, சக்கரவர்த்தித் திருமகனுக்காக, நீ ராஜ்ய பரிபாலனம் செய்! அப்படிச் செய்தால், பழியுமில்லை — சத்தியமும் காப்பாற்றப்படும்"

முனிவர் சொல்லியிருக்கிருர் இப்படி! எந்த அளவுக்கு அருமையாக உபதேசம் செய்திருக்கிருர் என்று சிந்தியுங்கள்! எவ்வளவு பெரிய சதி இது! முதலில் ராமனுக்குப் பட்டம் கட்ட, சதி செய்தவர்களில் ஒருவர் வசிஷ்டர், அதே வசிஷ்டர் இப்போதும், ராமனுக்கு அயோத்தியின் மீது உரிமையை நிலைநாட்ட இதுபோல வழி சொல்லித் தருகிருர். ராமன் இல்லாவிட்டாலும் அவன் அதிகாரம் இருக்கட்டும் —அவனது ராஜ்யமே அயோத்தியில் நடைபெறுகிறது என்று தெளிவாகட்டும், என்பதுதான் முனிவரின் திட்டம்!—அதன்படி ராமனது பாதுகைகளை, சிம்மாசனத்திலே வைத்துவிட்டு, பரதன், நந்திக் கிராமத்திலேயிருந்து ராஜ்யத்தை கவனித்து வந்தான். இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்கிருேம்? தந்தையின் சொல்லையும்—சத்தியத்தையும் மீறிவிட்டானு இல்லையா இராமன்?

ராமன் சிம்மாசனத்தில் உட்காரவில்லை; அவன் செருப்புகள் உட்கார்ந்தன.

"ஏ! தசரத ராஜனே! தந்தையாக வாய்த்த பாதகனே! என்னை சிம்மாசனத்தில் உட்காரக்கூடாது என்ருய் — இதோ அந்த சத்தியத்தை காப்பாற்றுவதுபோல் நடித்துக் கொண்டே, என்னுடைய செருப்புகளையே சிம்மாசனத்தில் வைத்துவிட்டேன் உன்னுடைய சத்தியம் — ஆணை —எல்லாம் இந்த செருப்புக்குச் சமானம்"

என்று சவால் விடுவது போலத்தானே ராமன், தனக்கு பதிலாக தன் பாதரட்சை ஆளட்டும் என்ருன்—இதற்கு ராமன் ஆட்சி என்ற பெயர் இல்லையா?—தந்தை வாக்கை மீறியதாக அர்த்தமில்லையா?—இப்போது, சென்னையிலே நேருவா உட்கார்ந்துகொண்டு ஆளுகிருர்? அவர் டில்லியிலே இருக்கிருர்; இங்கே அவரது அதிகாரம் கவர்னர் பிரகாசா மூலம் பிரயோகிக்கப்படுகிறது! இதுபோலத்தான் ராமன் காட்டிலேயிருந்தான் — அயோத்தியிலே அவனது அதிகார பூர்வமான பிரதிநிதியாக அவனது "புனிதமான" பாதரட்சைகள் இருந்து ஆட்சி புரிந்தன. ஆயிரம் முறை சொல்லுகிருேம்; ராமன், தந்தையின் வாக்கை மீறினன்—மீறினன் என்று! நெஞ்சிலே நேர்மை உள்ளவர்கள் — ராமனைக் காப்பாற்ற துடிக்கும் பக்த கோடிகள்—ஆச்சாரியாரின் சீடர்கள்— ராமன், தந்தை வாக்கை மீறவில்லை என்பதை நிரூபிக்க முடியுமா? "என்னையா ஆளக்கூடாது என்று சொல்கிறீர்கள்? என் செருப்பை ஆளச் செய்கிறேன்?" என்ற விதத்திலே வெற்றி பெற்ருன் சதிகார ராமன்!—கௌசல்யையின் மகன் என்றுலே தனிப் பிரியம் காட்டும் வசிஷ்ட முனிவரும், சதி நிறைந்த சாகசப் பேச்சால் ராமன் அதிகாரத்தை அயோத்தியில் நிலைநாட்டி ஜெயக்கொடி நாட்டினுர். இதை ஆச்சாரியார் மறுப்பதற்கில்லை.

●

சென்னையில் திராவிடர் திருநாள்!

திராவிடர் திருநாளாகிய பொங்கல் விழா 1955 ஜனவரி 14-ம் நாளன்று (எழும்பூரில்) மிகச் சிறப்பான முறையில் நடைபெற சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினர் அதற்கான ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். திருநாளில் அறிஞர் அண்ணு உள்பட எல்லா பேச்சாளர்களும் கலந்து கொள்ளுகின்றனர். பெரியவர்கள், சிறுவர் சிறுமியர் உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள், கழகப் பேச்சாளர்களின் கயிறு இழுப்புப் போட்டி; கிளைக்கழகங்கள் நாடகப் போட்டி, பாலர்களின் அழகுப் போட்டி இவைகளுடன் இசைவிருந்தும் நடன கலா நிகழ்ச்சிகளும் திருநாளை சிறப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றியடைவோருக்கு கழக சொற்பொழிவாளர்கள் வெள்ளிக்கோப்பை பரிசளிப்பதாக சம்மதித்துள்ளனர்—மூன்று போட்டிகளுக்கு குறையாமல் வெற்றிபெரும் ஒருவருக்கு விசேட வெள்ளிக் கோப்பை அளிப்பதாக அறிஞர் அண்ணு அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

ஆறுவயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு சித்திரப் போட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

மூன்றுவயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அழகுப் போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தைச் சார்ந்த தி. மு. க கிளைக் கழகங்களுக்கென நாடகப் போட்டியும் நடைபெறும்.

இத்தகைய நிகழ்ச்சிகள் அடங்கிய திராவிடத் திருநாளை கழகத் தோழர்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன் என சென்னை மாவட்டச்செயலாளர்கே. எம். கண்ணபிரான் கேட்டுக் கொள்கிருர்.

பொங்கல் வாழ்த்துகள்

போட்டோவிலேயே புதிய முறையில் பெரியார், அண்ணு, கருணுநிதி, நெடுஞ்செழியன், இன்னும் மற்ற தலைவர்களின் புகைப் படத்துடன் கிடைக்கும்.
தனிப் படங்களும் கிடைக்கும்.

போஸ்ட்கார்டு சைஸ் 0-4-0

கழிவு 25-சதவிகிதம்

மாதிரிக்கு ரூபாய் ஒன்று அனுப்பவும்.

ஜீ. சிவானந்தம்
நியூஸ் ஏஜண்டு.
22, பில்டர்பட் ரோடு.
வேலூர்.

மதுரை மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாடு

1955 ஜனவரி 8, 9 சனி, ஞாயிறு தேதிகளில்
மதுரை ஆரப்பாளைம் ஞானஒளிவுபுரம்
சௌந்தரபாண்டியனுர் பந்தலில் நடைபெறும்

சனி 8—1—55	ஞாயிறு 9--1—55
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்	தலைவர்
சத்தியவாணிமுத்து	மு. கருணுநிதி
திறப்பாளர்	திறப்பாளர்
தில்லை—வில்லாளன்	எம். பி சுப்பிரமணியம்

இரண்டு நாட்களிலும் அண்ணுஅவர்களும் இயக்க முன்னணி வீரர்களனைவரும் கலந்துகொள்வர்

★ ★ ★ ★

இரு நாட்களிலும் இசை முரசு நாகூர் அனிபா, இசைச் செல்வி பி. எஸ். செல்வா குழுவினர் இசை விருந்து வழங்குவர்.

இரு நாட்களிலும் லட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர், புரட்சி நடிகர் எம். ஜி. இராமசந்திரன் குழுவினர் நடிக்கும் புதிய நாடகங்களுண்டு.

மாநாட்டுக் கட்டணம் (இரு நாட்களுக்கும் நாடகங்களுட்பட—
வரவேற்பாளர்
ரூ 5, பிரதிநிதி ரூ 2, பார்வையாளர் ரூ 1,
பெண்கள் அணு 8

வ. கு. தலைவர், பொருளாளர்.
எஸ். வி. தொந்தி

செயலாளர்
எஸ். முத்து, எம். அய்யாசாமி

தொண்டர்படைத் தலைவர்
எஸ். எஸ். இராசேந்திரன், பி. கே. சேதுராமன், மு. வேலு.

கலைத்தோட்டம்

சுதந்தரச் சரண்டல்!

அமெரிக்கா முதல் ஏனைய மேலை நாடுகளில் 'இந்தியப்' படங்களைக் காண்பிப்பதற்காக இந்நாட்டுப் படாதிபதிகள் எவ்வளவோ கஷ்டப்பட்டு வருகிறார்கள். 1941-ம் ஆண்டிலிருந்தே இந்த முயற்சி நடந்து வருகிறது. இருந்தும் வெற்றி கிட்டவில்லை. அமெரிக்காவில் ஓரிரு இடங்களில்தான் இந்தியப் படங்கள் காட்டப் பட்டனவேயன்றி, இங்கு அமெரிக்கப் படங்கள் நாடெங்கும் திரையிடப் பட்டிருப்பதைப் போல் அங்கு இந்நாட்டுப் படங்களை திரையிட முடியவில்லை. அவ்வளவு தடைகள் அங்கு போடப்படுகின்றன!

அமெரிக்கப் பட முதலாளிகள் இங்கிருந்து எவ்வளவு சுரண்டுகிறார்கள் என்பதை 'பிலிம் இந்தியா' எடுத்துக் காட்டியிருக்கிறது. சிசில் டிமிலியின் "சாம்சன் அன் டிலைலா" படம் மட்டும் அமெரிக்காவிற்கு முப்பது லட்சம் ரூபாய்களை அனுப்பியிருக்கிறது.

இந்தியப் படங்கள் அங்கு ஓடுவதற்கு வசதி ஏற்படுத்தித் தராத அமெரிக்காவிற்குத்தான், அவர்களது படங்கள் இங்கு ஓடுவதற்கு வாய்ப்பளிப்பது மல்லாமல், ஆண்டுதோறும் கோடிக் கணக்கில் குவிந்துவிட்ட லாபத் தொகை அங்கு செல்வதற்கும் இந்திய அரசாங்கம் வாய்ப்பளிக்கிறது. இது எவ்வளவு பேதமை என்பதை கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டும்.

அர்ஜெண்டைன நாட்டில் அமெரிக்கப் படங்கள் 2180, தியேட்டர்களில் காட்டப் படுகின்றன. ஆனால் லாபத் தொகையில் ரூபாய் பத்து லட்சத்துக்குமேல் அமெரிக்க முதலாளிகள் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாது.

பெல்ஜியத்தில் அமெரிக்கா படாதிபதிகள் லாபத்தில் 50 சத வீதத்தைத்தான் சொந்த நாடு கொண்டு செல்ல முடியுமேயன்றி. இந்தியாவிலிருப்பதைப் போல் முழுத் தொகையையும் எடுத்துப் போக முடியாது.

கனடாவிலே அமெரிக்கப் படங்கள் 1927 தியேட்டர்களில் காட்டப் படுகின்றன. கொள்ளைலாபம் திரட்டும் அவர்களுடைய போக்கைத் தடுப்பதற்காக கனடா அரசாங்கம் 10 சதவீத பிரத்யேக வரியொன்றை விதிக்கிறது.

ஈக்வேடர் நாட்டிலே அமெரிக்க முதலாளிகளுக்குச் சொந்தமாக 100 தியேட்டர்கள்தான் இருக்கின்றன, ஆனால் எந்தவித லாபத் தொகையும் ஈக்வேடரை விட்டு அமெரிக்காவிற்குச் செல்ல முடியாது.

மேற்கு ஜெர்மனியில் கூட அப்படித்தான்! லாபத்தில் சிறு தொகைதான் அமெரிக்காவிற்குச் செல்ல அனுமதிக்கப் படுகிறது. மீதமிருக்கும் தொகை, ஜெர்மனியிலேயே அமெரிக்க முதலாளிகளால் முதலீடு செய்யப் பட வேண்டும்.

மொத்தம் எவ்வளவு தியேட்டர்கள் உள்ளன என்று இன்னமும் எண்ணப்படாத தென்னாப்பிரிக்காவில் கூட அமெரிக்கப் பட முதலைகள் 50 சதவீத லாபத்தைத்தான் தாய் நாட்டிற்கு எடுத்துச் செல்லலாம்!

மற்றைய நாடுகளில் அமெரிக்கப் பட முதலைகளின் சுரண்டல் இப்படியெல்லாம் தடுத்து நிறுத்தப் படுகிறது. சோஷலிஸப் பாதையிலே மின் வேகத்தில் முன்னேறுவதாகப் பறையடிக்கப் படும் இந்த நாட்டில்தான் அமெரிக்க படாதிபதிகள் சுதந்தரமாகக் கொள்ளையடிக்கின்றனர்.

ஒரு "சாம்சன் அன் டிலைலா" மட்டும் முப்பது லட்ச ரூபாய்களை அமெரிக்காவிற்கு அனுப்பியிருக்குமேயானால், இதர படங்களின் மூலம் 'ஏழை இந்தியர்களின்' பணம் எவ்வளவு போயிருக்குமென்று நினைக்கிறீர்கள்?

சுதந்தரமான இந்தச் சுரண்டலைத் தடுக்க அரசினர் ஏதாவது வழிவகை செய்தாக வேண்டும், இந்த வழியிலெல்லாம் பணம் வெளிநாடு சென்று கொண்டிருந்தால் பின்னர் எப்போதுதான் பொருளாதாரம் உருப்பட்டு வரும்?

"ரோமியோ ஜூலியட்"

காதல் இலக்கணத்துக்கு ஷேக்ஸ்பியர் சமைத்த இலக்கியமாம் 'ரோமியோ ஜூலியட்' நாடகத்தை மீண்டும் படமெடுத்திருக்கிறார்கள்.

இத்தாலிய நாட்டு எழுத்தாளர் ஒருவருடைய கதையை அடிப்படையாக வைத்தே ஷேக்ஸ்பியர் அந்த நாடகத்தை வரைந்தார். இத்தாலியில் ரோமியோ ஜூலியட் கதை நடந்ததாகச் சொல்லப்படும் பிரதேசத்திலேயே இந்தப் படமும் எடுக்கப் பட்டிருக்கிறது. படத்தை டைரக்ட் செய்யும் ரெனட்டோ காஸ்டெல்லியும் ஒரு இத்தாலியர்தான்! இரண்டாண்டு காலம் வரை சிந்தித்த பின்னரே படப்பிடிப்பு துவங்கப்பட்டதாம்!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நாடகம் இருபதாம் நூற்றாண்டிற்கும் ஒத்து வரவேண்டுமென்பதற்காக, டைரக்டர், கதாபாத்திரத்திலும், ஷேக்ஸ்பியரின் வசனத்திலும், ஆண்டாண்டு காலமாக இருந்துவரும் மேடை அமைப்பிலும்கூட பல மாற்றங்கள் செய்திருக்கிறாராம்.

வார்த்தைக்கு வார்த்தை ஷேக்ஸ்பியரையே படத்திலும் எதிர் நோக்கும் நேயர்களிடையே டைரக்டரின் இந்தத் துணிவான போக்கு பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

நட்சத்திர ஜோடி!

சென்ற கிழமை பத்திரிகைகளில் வெளியான பரபரப்பான செய்தியொன்று எல்லோருக்கும் நினைவிருக்கலாம். முஸ்லீம்களின் மைனாரிட்டி பிரிவுகளில் ஒரு பிரிவுக்குத் தலைவரான ஆகாகானின் மருமகளும் ஆஸ்திரேலியாவின் குதிரைப் பந்தயத்திலிருந்து அமெரிக்காவின் சூதாட்டங்கள் வரை எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளும் அலிகானின் மாஜிமனைவியுமான பிரபல சினிமா நட்சத்திரம் ரீட்டஹேவொர்த்; அலிகானுக்கும் தனக்கும் பிறந்த குழந்தை யாஸ்மினுக்காக 64-கோடி ரூபாய்கள் நஷ்ட ஈடு கோரியிருக்கிறாள்.

64-கோடி ரூபாய்கள்! குழந்தையொன்றின் பராமரிப்புக்காக நடிகையொருத்தி கேட்டிருக்கும் நஷ்ட ஈடு!

தொகையின் எண்ணிக்கையைக் கவனிக்கும்போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அந்த ரூபாய்கள் நமது நிதி அமைச்சர் தேஷ்முக்கிற்குக் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு ஒரு ஐந்தாண்டுத் திட்டமே தயாரித்துவிடுவார். ஒன்றுமறியாத ஏழை முஸ்லிம்கள், தமது மதகுருவுக்குத் தரும்தொகை இப்படியெல்லாம் விரயமாகிறது!

ரீட்டாஹேவொர்த் கள்போன்ற, வண்டுமனம் படைத்த பெண்டுகள் உலவும் ஹாலிவுட்டில் கண்ணகி மனம் படைத்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்கு, மேலே தரப்பட்டிருக்கும் ஜோடிகளாம் ஸ்டீவர்ட் கிரேன்ஜரும் அவரது மனைவி ஜீன் சிம்மன்சுமே சாட்சி!

ஸ்டீவர்ட் கிரேன்ஜரை கையிலே வாளுடன் பலவித கோணங்களில் ஆங்கிலப் படங்கள் பார்ப்போர் சந்தித்திருக்கலாம். 'ஸ்கேரமௌஷ்' என்னும் படத்தில் தொடர்ந்தாற்போல் இருபது நிமிஷ நேரம் சளைக்காமல் வாட் சண்டை போட்டிருக்கிறார்.

அவரது மனைவி ஜீன்சிம்மன்ஸ் ஷேக்ஸ்பியரின் மகா காவியமான 'ஹாம்லெட்' படத்தில், இழந்த காதலினால் சித்தபேதம் கொண்டவளாகி, படம் பார்ப்பவரின் சிந்தையைக் கொள்ளை கொள்ளும் ஒபீலியாவாக நடித்தார். இந்த ஜோடி 1950-ம் ஆண்டில் ஒன்று சேர்ந்தது. ரீட்டாஹேவொர்த்கள் நிறைந்த ஹாலிவுட்டில் விவாகரத்துக்கு இடமின்றி இத்தனை நாளும் ஒன்றாக இருக்கும் இந்த நட்சத்திர ஜோடிகள் ஒரு புதுமையே!

கடைசிப்பக்கம்

பெ. தமிழ்ச்செல்வன். புதுக்கோட்டை

(?) பழக்கம்—வழக்கம், இவை இரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன?

சித்திரம் வரைவது கைப்பழக்கம்-தினம் கடற்கரை செல்வது அவன் வழக்கம். இரு சொற்களும் வரும் இடம் காண்க!

★

எஸ். எல். கணபதிராமன்—மைசூர்

(?) ஒரு சிலர், தி. மு. கழகத்தை ஏணியாக உபயோகித்துக் கொள்ள எண்ணுகிறார்களே; அவர்கள் எதிர்காலம் என்ன?

அந்த சுயநலமிகளுக்கு தி. மு. க. ஏணியாக இருக்கலாம்—ஆனால் அந்த எத்தர்களுக்கு, தி. மு. க. தன்பக் கேணியும் வெட்டி வைத்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது!—

★

க. கா. இராஜு-மணிமுத்தாறு அணை

(?) ஒரு மாணவன் பள்ளியிலிருந்து வெளிவந்து நாலாண்டுகளாகியும், ஒரு நிரந்தரமான வேலையை அடைய முடியவில்லையென்றால் அந்த நாட்டைப்பற்றியும் அந்த அரசாங்கத்தைப் பற்றியும் தங்கள் கருத்தென்ன?

"திராவிடநாடு திராவிடருக்கே;" என்ற குரல் வெற்றி காணும் வரையில் இந்த நிலைமை நீடித்தே தீரும் தோழரே!—

★

(?) தி. க., தி. மு. க, இரண்டும் ஒரே பாதையில் செல்ல முடியாதா?—

சேரவேண்டுமென்று எண்ணுகிற லட்சியபுரி ஒன்றுதான், ஆனால் பாதை வேறு வேறானது தான். ரயிலும், காரும், ஒரே பாதையில் போக முடியுமா? ஒரே திக்கில் வேண்டுமானால் போகலாம்!—

அ. சு. அப்துல்ஹை-அரகண்டநல்லூர்

(?) அன்பரே! பொங்கல் விழாவுக்கு ஒரு அன்பளிப்பு தரலாமென இருக்கிறேன். ஏற்றுக் கொள்வீரா ?

ஓ! இரண்டே கால் ரூபாய் அன்பளிப்பு அனுப்புங்கள். நானும் தங்களுக்கு ஒரு முரசொலி பொங்கல் மலர் அன்பளிப்பாக தபாலில் அனுப்புகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்.

சாந்தாமணாளன். பழங்குளம்.

(?) முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த பாரியின்கொடை, போர் முனையில் கண்ணனுக்கு கவச குண்டலமீந்த கர்ணனின் கொடை இரண்டையும் விளக்குக!

முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி என்பது மிகைப் படுத்திக் கூறியதாகும்! அது பாரியின் பண்பு விளக்கம். கர்ணன், கண்ணனிடம் கவசகுண்டலங்களைத் தந்தது—கண்ணனின் சூழ்ச்சிக்கு ஒரு நல்ல விளக்கம்.

●

பிறைவானம்...

★ 9ம் பக்கம் தொடர்ச்சி

இறங்கினான். நீரில் ஓடினான். ஓடிக் கொண்டேயிருந்தான். முடிவில் கழுத்தளவுத் தண்ணீரையும் கடந்தான். தலை மறைந்தது. அதே கணம் அவன் மனதை பயம் கவ்விக்கொண்டது. மூச்சுத் திணறியது. "ஐயோ! அம்மா! அப்பா!" என்று கதறினான். நீரில் மூழ்கினான். மீண்டும் கதறினான். ஆனால் என்ன பலன்? அவனும் அவனது அழுகுரலும் அந்த ஆழமான குளத்தின் அடியிலேயே அமுங்கியது.

★ ★ ★

"ஐயோ! பாவம்! முட்டாள் கண்ணன். இதற்காகவா செத்துப் போவார்கள்? நல்ல பைத்தியக்காரத்தனம்! நல்ல ரோசக்கார புத்தி" என்று தானே எண்ணத் தோன்றும். ஆனால், கதை அத்துடன் முடிந்துவிடவில்லை.

நீரில் மூழ்கிய கண்ணன் மீண்டும் கண் விழிக்கத்தான் செய்தான். ஆனால் எங்கே? நீருக்கு அடியில் அல்ல. தன் வீட்டிலேயே!

மெதுவாகக் கண்களைத் திறந்தான் கண்ணன். சுற்றுமுற்றும் உற்றுப்பார்த்தான் அவன் வீட்டில்தான் படுத்திருந்தான், எதிரே அப்பா, அம்மா எல்லோரும் கலங்கிய கண்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். பக்கத்தில் இன்னொரு மனிதர்—பள்ளிக்கூடத்தின் தமிழாசிரியரும் நின்று கொண்டிருந்தார்.

கண்ணன் கண் விழித்ததுதான் தாமதம்; அம்மா குபீரென்று பாய்ந்தார்கள். "என்ன காரியம் செய்தாய்; என் செல்வமே!" என்று கத்தினார்கள். அவனை அணைத்துக் கொண்டார்கள். கண்ணனுக்கு பள்ளிக்கூட ஞாபகம் வந்து விட்டது. "அம்மா! நான் நன்றாகத் தானம்மா படித்தேன்—நன்றாகத்தான் எழுதினேன்........."—அவன் முடிக்கவில்லை.

"கண்ணா! பெரிய கல்விக்காரனப்பா நீ! நீ பரீட்சையில் தோல்வி அடைந்தாய் என்று இருந்ததை நம்பலாமா? உன் புத்திசாலித்தனத்தில் உனக்கே நம்பிக்கையில்லையா? முட்டாளே! தேர்வுகளைத் தெரிவித்த பத்து நிமிஷத்திற்கெல்லாம் திருத்தமும் சொன்னார்கள், நீ வெற்றியடைந்து விட்டாய் என்று! தவறுக்கு வருந்துவதாகவும் சொன்னார்கள். அதன் பிறகு நான் வீட்டுக்கு வரும் வழியில் குளத்தில் மூழ்கிக் கொண்டிருந்த உன்னைக் கண்டேன்..." என்றார் தமிழாசிரியர்.

கண்ணன் தன் காதுகளில் தேனைப் பாய்ச்சியதாக உணர்ந்தான். 'அப்படியா?' என படபடிப்புடன் கேட்டான்.

"ஆமாம்!" என்று சொல்லிக்கொண்டே ஆசிரியர் நடந்தார்.

கொள்ளை மகிழ்ச்சி—எல்லையில்லா சிரிப்பு—இவற்றோரு கண்ணன் படுக்கையை விட்டு துள்ளிக் குதித்தான். பக்கத்தில் அவனது மேஜையில் விரிந்து கிடந்த திருக்குறளின் பாடல் ஒன்று அவன் கண்களில் பளிச்சென்று தென்பட்டது.

"எண்ணித் துணிக கருமம்! துணிந்தபின்
எண்ணுவ மென்பதிழுக்கு"

"அப்பப்பா! யோசிக்காமல் என்ன காரியம் செய்யத் துணிந்தோம்! இன்னேரம் குளத்துக்கு நான் பலியாயிருந்தால்......? வெற்றி வீணாகியல்லவா இருக்கும்? அம்மாவும் அப்பாவும் தான் எவ்வளவு துடித்திருப்பார்கள்? இனிமேலாவது எதையும் யோசித்துதான் செய்யவேண்டும்!" என்று, எண்ணினான் கண்ணன். திருக்குறளைக் கையில் எடுத்தான். அந்தக் குறளை படிக்கலானான். ஃ

★ நீங்கள் எதிர்பார்க்கும் எழுத்துச் சிற்பிகள் அனைவருமே எழுதுகிறார்கள்—

★ முரசொலி ★
பொங்கல் மலர்

★ மலரை . அறிஞர் அண்ணாவின் பொன்னுரை ஆரம்பித்து வைக்கிறது—
★ புதுமை நிறைந்த கதைகள்.
★ பொருள் செறிந்த கட்டுரைகள்.
★ இருள் ஒழிக்கும் கவிதைகள்.
★ அழகு கொட்டும் ஓவியங்கள்.
★ வனப்பும் சிறப்பும் அமைந்த மூவர்ண முகப்புச் சித்திரம்.
★ "மணிமகுடம்" நாடகம்—மலருக்கே ஒரு மணி மகுடம்!
★ மறத்தி வருவாள்—"மானம்" சொல்வாள்!
★ அரும்பு—சிரிக்கும் பிறைவானம் பொலிவு பெறும்.
★ "பரதாயணம்" — நாடக உருவில், நல்லதோர் விருந்து!

இன்னும், மலரில் சிறப்புகள் சொல்ல வேண்டுமா? — அடுத்த இதழில் முழு விபரம் காணுங்கள்!—

விலை ரூபாய் 2